




விலை
ரூபா 40

பக்கங்கள் - 12

03.01.2025 - வெள்ளிக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 - இதழ் : 62 - குரோதி வருடம் மார்கழி மாதம் 19 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 03







## கையெழுத்துப் போராட்டம்





(சண்முகம் தவசீலன்)

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மல்லாவி நகரில் நேற்று (02) கையெழுத்து போராட்டம் இடம்பெற்றது. (தொடர்ச்சி...) 02

### சீன ஜனாதிபதியின் அதிஷ்ட செய்தியால் மகிழ்ச்சியில் அரசாங்கம்

# அநுர முன்வைக்கும் திட்டத்தை முழுமையாக செயற்படுத்த தயார்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தமது சீன பயணத்தில் முன்வைக்கும் ஒரு திட்டத்தை முழுமையாக செய்துக்கொடுக்க சீனா தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியின் சீன பயணம் தொடர்பிலான திட்டங்களை வகுக்கும் நோக்கில் இலங்கை வந்திருந்த சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் பிரதித் தலைவர் கின் போயோங், சீன ஜனாதிபதியின் இந்த செய்தியை அநுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை இரண்டு நாள் பயணமாக ஜனாதிபதி இந்தியா சென்றிருந்த தருணத்தில் கின் போயோங் இலங்கை வந்திருந்ததுடன், அரசாங்கத்தின் முக்கிய தரப்பினருடன் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தார்.

கின் தலைமையிலான குழு ஜே.வி.பி தலைமையகத்திற்கும் சென்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தது. இதுகுறித்து ஊடகங்களுக்கு விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜே.விபிக்கும் இடையில் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்புஇருப்பதாக கூறியிருந்தார்.

ஜனாதிபதி இந்திய பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும், கின் தலைமையிலான சீனக்குழுவினர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை சந்தித்தனர். அங்கு சீன (தொடர்ச்சி...)



## அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் : கேள்வியெழுப்பும் எதிர்க்கட்சிகள்

(கனுஷியா புஷ்பகுமார்)

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் தொடர்பில் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் கேள்வியெழுப்ப எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது கலாநிதி பட்டம் தொடர்பில் எழுத்துமூலமான சான்றிதழை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக அறிக்கை வெளியிட்டு, கடந்த 13ஆம் திகதி அசோக ரன்வல பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

எனினும், தற்போது இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் அவருடைய அந்த கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் எந்த வொரு எழுத்துமூல ஆவணமும் முன்வைக்கப்படவில்லை.



ஜப்பானின் வசேதா பல்கலைக்கழகத்திலிருந்து "கலாநிதி" பட்டத்தை பெற்றுக் கொண்டதாகவும் அவர் கூறியிருந்தார். எனினும், மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் பட்டப்படிப்பு சான்றிதழையும் இதுவரையில் அவர் சமர்ப்பிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.




திருகோணமலை கடற்கரையில் 2006 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 19 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று (02) அவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் நடந்தபோது... ( படம் அப்துல் சலாம் யாஸீன் )

## நாகை- கே.கே.எஸ் கப்பல் சேவை மீண்டும் தாமதம்




தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கு இயக்கப்படும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவைமீண்டும் தாமதமடைந்துள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த கப்பல் சேவையை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கு (தொடர்ச்சி...) 02

## மொட்டுக்கட்சியை வழிநடத்தும் பொறுப்பு ஜோன்ஸ்டனிடம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை வழி நடத்தும் பொறுப்பு முன்னாள் அமைச்சரும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளருமான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைமையகத்தில்கடந்தவாரம் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



(தொடர்ச்சி...) 02

## புலனாய்வு பிரிவுக்கு புதிய பிரதானி

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைமையதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தனது கடமைகளை பொறுப் பேற்றுக்கொண்டார்.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தவிடமிருந்து (ஓய்வு பெற்றவர்) தனது நியமனக்கடித த்தை இவர் நேற்று முன்தினம் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து மேஜர் ஜெனரல் வணிகசூரிய (தொடர்ச்சி...) 02

## 7ஆம் திகதிக்கு பின் அரிசி தட்டுப்பாடுக்கு முற்றுப்புள்ளி

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனவரி 7ஆம் திகதியின் பின்னர் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு படிப்படியாக நீங்கும். இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி உரிய நடைமுறைகளின் கீழ் விநியோகிகப்பட்டு வருவதாக இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவிந்து பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற (தொடர்ச்சி...) 02

## சிறைச்சாலையினுள் மரம் முறிந்து வீழ்ந்து கைதி பலி: 12 காயம்

மாத்தறை சிறைச்சாலையில் உள்ள கட்டடமொன்றின் மீது நேற்று முன்தினம்(01) இரவு பாரிய மரக் கிளை முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்தில் 12 கைதிகள் காயமடைந்த நிலையில், மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒரு கைதி உயிரிழந்ததாக பொலிஸார் (தொடர்ச்சி...) 02

## 7 ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் கூடும் நாடாளுமன்றம்

(கனுஷியா புஷ்பகுமார்)

நாடாளுமன்றம் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கூடுவதற்கு தீர்மானிக்கப்படுள்ளதாக நாடாளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். (தொடர்ச்சி...) 02

## அமெரிக்காவில் பாதசாரிகள் மீது ஐ.எஸ் தாக்குதல்; 15 பலி

புத்தாண்டு தினத்தன்று அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர், தனது டிரக் வாகனத்தில் இஸ்லாமிய அரசு (ஐஎஸ்ஐஎஸ்) கொடியை பறக்கவிட்டபடி நியூ ஓர்லியன்ஸின் நெரிசலான பிரெஞ்ச் கொலனியில் வாகனத்தை மோதி நடத்தப்பட்ட தாக்குதலால் 15 பேர் பலியாகியதாக அமெரிக்க செய்திகள் 02



## கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில் 78,000 மேற்பட்ட வெடிபொருட்கள் மீட்பு





(ஜதுர்சிகா)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 8 வருட காலத்தில் 78 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக கண்ணிவெடி அகற்றும் ஸார்ப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2024 டிசம்பர் (தொடர்ச்சி...) 02

## நீதிமன்றில் கைபேசியை திருடி காதலனுக்கு கொடுத்த பெண் கைது

( ஆர்.எப்.எம்.சுஹைல் )

நுவரெலியா நீதவான் நீதிமன்றின் வழக்குப் பொருட்கள் களஞ்சியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பெறுமதி மிக்க கைத்தொலைபேசியை களவாடி தனது காதலனுக்கு பரிசாக வழங்கிய பெண் ஒருவரை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் (தொடர்ச்சி...) 02

## தொடரும் ரயில் தாமதங்கள்

(கனுஷியா புஷ்பகுமார்)

புகையிரத சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் உட்பட புகையிரத போக்குவரத்தின் பிரதான பிரிவுகளில் ஏறக்குறைய ஆயிரத்திற்கும்மேற்பட்ட பணியாளர்கள் (தொடர்ச்சி...) 02

## புலனாய்வு...

(ஓய்வு) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் அவரது அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க ஓய்வுபெற்றதையடுத்து, வெற்றிடமான தேசிய புலனாய்வு பிரிவின் பிரதானி பதவிக்கு மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய (ஓய்வு) நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய (ஓய்வு) இலங்கை இராணுவத்தில் 35 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றிய இராணுவ அதிகாரியாவார்.

## சிறைச்சாலையினுள்...

ார் தெரிவித்தனர். மிதிகம பகுதியைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்ததாக சிறைச்சாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த ஜி மற்றும் எஃப் விடுதிகளின் மீது அருகில் இருந்த மரத்தின் கிளை ஒன்று விழுந்ததாக தெரிவித்த சிறைச்சாலை பொலிஸார், விபத்தின் போது, ஜி மற்றும் எஃப் விடுதிகளில் 100 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

காயமடைந்த கைதிகள் தெனிபிட்டிய, மிரிஸ்ஸ, வெலிகம, காலி, மாத்தறை, கந்தர, படபொல, தெய்யந்தர மற்றும் கல்கமுவ ஆகிய பகுதிகளை சேர்ந்த வர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ஏனைய கைதிகள் அனைவரையும் வேறு கட்டடத்தில் பாதுகாப்பாக தங்க வைக்க சிறைத்துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மாத்தறை சிறைச்சாலையில் உள்ள கைதிகள் அனைவரும் அல்லது ஒரு பகுதியினர் பாதுகாப்பாக வேறு சிறைக்கு மாற்றப்பட உள்ளதாக சிறைச்சாலை திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தொடரும்...

பற்றாக்குறை நிலவுவதால் ரயில் தாமதங்கள் ஏற்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பணியாளர்கள் பற்றாக்குறையாலும், ரயில் இயந்திரங்கள் கிடைக்காததாலும் நாளொன்றுக்கு நாற்பதுக்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் இரத்து செய்ய வேண்டியுள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

தினமும் 390 ரயில்கள் இயக்க ப்பட வேண்டியிருந்தாலும், இந்த பற்றாக்குறையால், 346 ரயில்களுக்கு மட்டுமே ரயில் பயணங்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. தற்போது 150 ரயில் ஓட்டு னர்கள், 120 கட்டுப்பாட்டாளர்கள், 600 தொழிநுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கு பற்றாக்குறை காணப்படுவதாக கூறப்படுகிறது. பணியாளர்கள் பற்றா க்குறையால் இயந்திர பராமரிப்புபணி தாமதமாகி வருவதாகவும், பராமரிப்பு பணிக்காக தற்போது 30-40 இயந் திரங்கள் பராமரிப்பு பிரிவுகளில் காணப்ப டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் பணியாளர் பற்றாக்குறை குறித்து அரசாங்கத்திற்கு அறியப்படுத்தியுள்ளதாகவும் அது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாகவும் ரயில்வே திணை க்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

## கையெழுத்து...

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மல்லாவி நகரில் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு மகஜராக ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி...

வரையான காலப்பகுதியில் 36 இலட்சத்து 57 ஆயிரத்து 829 சதுரமீற்றர் பரப்பளவில் (36,57,829 sqm) இருந்து 78,375 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் ஸார்ப் நிறுவனத்தினா ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதை தொடர்ந்து மக்களின் மீள்குடியேற்றம், விவசாய நடவடிக்கைகள், உட்கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றை துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்களால் சர்வதேச நாடுகளின் நிதியுதவியுடன் உள்ளூர் பணியாளர்களை கொண்டு வெடிபொருட்களை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளில் ஸார்ப் நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறு இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் (SHARP) மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமாக செயற்பட்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு மற்றும் மாங்குளம்,கொக்காவில் பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் தட்டுவன்கொட்டி ஆகிய பகுதியிலும் வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு, அம்பகாமம், மாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி மற்றும் ஆனையிறவிலும் துரித கதியில் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

## மொட்டுக்கட்சியை...

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மிக நெருங் கிய நண்பர்களில் ஒருவரே முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ. கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்த இவர் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவாகவும் செயல்பட்டார். மஹிந்த ராஜபக்சவின் சிபாரிசின் பேரிலேயே ஆளுங்கட்சி கொறடா பதவி ஜோன்ஸ்டனுக்கு வழங்கப்பட்டதாக அப்போது ஆளுங்கட்சி வட்டாரத்தில் பேசப்பட்டது.

2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் மீண்டும் மஹிந்தவை ஆட்சிக்கட்டிலில் அமர்த்தும் வரை ஓயமாட்டேன் என சபதம் எடுத்தவர்களில் ஜோன்ஸ்டனும் ஒருவர்.

அதேபோன்று 2005ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரையான மஹிந்தவின் அரசாங்கத்தின் முக்கிய புள்ளியாக செயல்பட்டவர்களிலும் ஒருவர்தான் ஜோன்ஸ்டன். 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், 2020 பொதுத் தேர்தல்களை வழிநடத்திய பொதுஜன பெரமுனவை வெற்றிவாகை சூடவைத்த குழுவிலும் அங்கம்வகித்தவர்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவை அவர் வழிநடத்தியிருந்தார். தற்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுவரும் சூழலில் இத்தேர்தலை வழிநடத்தும் பொறுப்பை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜோன்ஸ்டனிடம் வழங்கியுள்ளது.

மஹிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச உட்பட பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் அவருக்கு இந்தப் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. மகிந்தவின் நெருங்கிய விசுவாசியாக ஜோன்ஸ்டன் தொடர்வதால் அவருக்கு இந்தப் பொறுப்பு தொடர்ந்து வழங்கப்படுவதாக பொதுஜன பெரமுனவின் வட்டாரங்களில் அறிய முடிகிறது. இதேவேளை, எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூ ராட்சிமன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன், தேர்தலுக்கான நிதியை 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகளையும் மேற்கொள்ள உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## 7ஆம் திகதி...

சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனவரி 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 முதல் 10.30 வரை வாய்மொழி பதிலுக்கான கேள்வி நேரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பின்னர் காலை 10.30 முதல் மாலை 5.30 வரை, அரசு தரப்பில், "2024ம் ஆண்டு மத்திய நிதி நிலை அறிக்கை" தொடர்பான ஒத்திவைப்பு விவாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

ஜனவரி 8ஆம் திகதிபுதன்கிழமை காலை 9.30 – 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பின்னர் 10.00 காலை 10.30 நேரம் வாய்மொழி பதிலுக்கான கேள்வி நேரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, காலை 10.30 முதல் மாலை 5.00 மணி வரை இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிமுறைகள், அந்நிய செலாவணி சட்டத்தின் கீழ் ஆணை, பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு முறை சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைகள், கெசினோ வணிக (ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் விதிமுறைகள், துறைமுகம் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரி சட்டத்தின் கீழ் உத்தரவு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குமுறைகள் குறித்து விவாதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாலை 5.00 மணி முதல் 5.30 வரை சபை ஒத்திவைப்பின் போது கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 9ஆம் திகதி வியாழன் காலை 9.30 – 10.30 வரை வாய்மொழி பதிலுக்கான கேள்வி நேரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பின்னர் காலை 10.30 முதல் 11.30 வரை இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டு சட்டத்தின் கீழ் உத்தரவு, சிறப்பு சரக்கு வரி சட்டத்தின் கீழ் உத்தரவு மற்றும் நலன்புரி சலுகைகள் சட்டத்தின் கீழ் அறிவிப்புகள் விவாதிக்கப்பட உள்ளன.

எதிர்க்கட்சிகள் முன்வைத்த பிரேரணையின் பிரகாரம் சபை ஒத்திவைப்பு தொடர்பான விவாதத்தை மாலை 5.30 வரை நடத்துவதற்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

ஜனவரி 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முழு நாளும், மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அன்றைய தினம் காலை 9.30 முதல் மாலை 5.30 வரையில் உயிரிழந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, எச்.நந்தசேன மற்றும் டியூ குணசேகர ஆகியோருக்கு அனுதாபப் பிரேரணைகளுக்கு நேரம் ஒதுக்க தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

## நீதிமன்றில்...

வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியா நீதிவான் நீதிமன்றின் வழக்கு சான்றுப்பொருட்கள் களஞ்சிய அறையில் பெறுமதியான தொலைபேசி காணாமல் போனமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் நுவரெலியா பொலிஸார், தொழில்நுட்ப உதவியுடன் காணாமல் போன தொலைபேசியை பயன்படுத்திய நபரை கண்டுபிடித்தனர். இதனையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளையடுத்து நீதிமன்ற களஞ்சியசாலையில் பணிபுரிந்த பெண் உத்தியோகத்தர் ஒருவரே தொலைபேசியை திருடி தனது காதலனுக்கு பரிசாக வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

தொலைபேசியைத் திருடிய சந்தேக நபரான குறித்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு (30) நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே அப்பெண் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## நாகை...

தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கப்பல் சேவை மீண்டும் தாமதமடைவதாக குறித்த கப்பல் சேவை நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு தரப்பிடம் இருந்து கிடைக்கப் பெற்ற வானிலை முன்னறிவித்தலைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, குறித்த கப்பல் சேவையை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறித்த கப்பல் சேவை நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுந்தரராஜ் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில்...

தெரிவிக்கின்றன.

அமெரிக்க நகரத்தின் மிகவும் சுறுசுறுப்பான சுற்றுலாப் பகுதி களில் ஒன்றான பிரெஞ்சு கொலனியின் மையத்தில் உள்ள போர்பன் தெருவில் புதன்கிழமை (01) அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். மேலும்,30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த விபத்து அல்ல என்று விபரித்துள்ள அமெரிக்க புலனாய்வுப் பிரிவு (FBI) அது ஒரு பயங்கரவாதச் செயல் என தெரிவித்துள்ளது.

மக்கள் கூட்டத்தின் மீது டிரக் வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியதை அடுத்து, அதனை செலுத்திய சாரதி தப்பி ஓட முயற்சித்த போது அவர் மீது சட்ட அமுலாக்க அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால், இரண்டு அதிகாரிகள் காயமடைந்தனர். மேலும், சட்ட அமுலாக்க அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டினால் சந்தேக நபர் கொல்லப்பட்டார்.

இதையடுத்து ஆரம்பக் கட்ட விசாரணைகளை மேற்கொண்ட புலனாய்வாளர்கள், சந்தேக நபர் 42 வயதான அமெரிக்க குடிமகன் என்றும், அயல் மாநிலமான டெக்சாஸை ச் சேர்ந்த ஷம்சுத்–தின் ஜப்பார் என்ற இராணுவ வீரர் என்றும் அடையாளம் கண்டு கொண்டனர். இந்த நிலையில், புத்தாண்டு தினத்தில் 15 பேரைக் கொன்ற நியூ ஆர்லியன்ஸ் தாக்குதலில் சந்தேக நபர் தனியாக செயல்படவில்லை என்று அமெரிக்க புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அவர் ஓட்டிச் சென்ற வாகனத்தில் ஒரு இஸ்லாமிய அரசின் (ஐஎஸ்ஐஎஸ்) கொடியும், அருகிலேயே இரண்டு மேம்படுத்தப்பட்ட வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் புலனாய்வாளர்கள் குறிப்பிட்டனர்.

## சீன...

ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் விசேட செய்தியொன்றையும் ஜனாதிபதிக்கு கின் தெரியப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில், ஜனாதிபதி தமது சீன பயணத்தின் போது விரும்பும் எந்தவொரு புதிய திட்டத்தையும் முன்வைக்க முடியும் எனவும், அதனை நடைமுறைப்படுத்த சீன அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அந்தச் செய்தியில் கூறியுள்ளார்.

இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் பெற்றுக் கொள்ளாத தனித்துவமான இந்த யோசனையை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் சீனா முன்வைத்துள்ள நிலையில், கடந்த சில நாட்களாக சீன பயணத்தின் போது முன்வைக்கப்படவுள்ள திட்ட முன்மொழிவு தொடர்பில் அரசாங்கத்திற்குள் விசேட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையில் தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ள மத்திய அதிவேக வீதியின் எஞ்சிய பகுதியை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் சீன பயணத்தில் போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பிரிவுக்குப் பொறுப்பான சீன நிறுவனத்துக்கு அரசு பெருமளவு இழப்பீடு வழங்க வேண்டியுள்ளதால் அந்தப் பணி முடங்கியுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் சீனாவிடமிருந்து அரசாங்கத்திற்கு மகிழ்ச்சியான செய்தி கிடைத்துள்ளதாகவும் இதன்மூலம் இழப்பீட்டுத் தொகையை முற்றாக இடைநிறுத்த அல்லது இழப்பீட்டுத் தொகையை கணிசமான அளவு குறைத்து கடவத்தை – மீரிகம அதிவேக வீதியின் எஞ்சிய பகுதியை நிர்மாணிப்பதற்கு சீனா இணங்கியுள்ளதாக தெரியவருகிறது.

மேலும், பொருளாதார நெருக்கடி காரணமாக கைவிடப்பட்ட கண்டி வரையிலான மத்திய அதிவேக பாதையின் முழுப் பகுதியையும் நிர்மாணிப்பது குறித்தும் சீனா அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் கலந்துரையாடியுள்ளது. ஜனாதிபதியின் சீன பயணத்தில் மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் தொடர்பில் சாதகமான பதில் சீனாவிடமிருந்து கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

மேலும், ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்கும் சீனாவின் திட்டம், ஹம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயத்தை நிறுவுவதற்கான சீனா முன்மொழிந்துள்ள திட்டம் குறித்தும் இந்தப் பயணத்தில் கலந்துரையாடப்படும் எனவும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 7ஆம் திகதிக்கு..

ஊடகச்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,"அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதன் ஊடாக கடந்த காலத்தில் நாட்டில் அரிசிக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நீங்கும். அரசாங்கம் இறக்குமதி செய்த 5200 மெற்றிக் தொன் அரிசியின் முதல் தொகுதி கடந்த 30ஆம் திகதி எமக்கு கிடைக்கப்பெற்றது. அதனை பகிர்ந்தளிக்கும் பணிகளும் இடம்பெறுகின்றன. இரண்டாம் கட்டமாக 520 மெற்றிக்தொன் எமது கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதனை பகிர்ந்தளித்து வருகிறோம்.

இறக்குமதி செய்யப்பட்டஅரிசியை நான்கு கட்டங்களாக விநியோகித்துள்ளோம். மேலும் 5200 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யும் அனுமதியையும் நிறுவனமொன்றுக்கு வழங்கியுள்ளோம். எதிர்வரும் 7ஆம் திகதி குறித்த தொகை எமக்கு கிடைக்கப்பெறும்.

7ஆம் திகதியின் பின்னர் அரிசிக்கான தட்டுப்பாடு படிப்படியாக நீங்கும். இதற்கு அப்பால் மேலும் 28ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க உள்ளோம். நாட்டில் காணப்படும் சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம். அரசாங்கம் நாட்டு அரிசியை மாத்திரமே இறக்குமதி செய்துள்ளது." என்றார்.

இதேவேளை, தனியார் துறையினர் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. என்றாலும், சிவப்பு அரிசிக்கு பாரிய தட்டுபாடுகள் இருப்பதாகவும் அரிசியின் விலைகள் கட்டுப்பாட்டு விலையில் இல்லை என்றும் நுகர்வோர் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர்.

# உயர்தர வகுப்பு மாணவர்கள் இடைவிலகுவது தொடர்பில் ஆராயப்படுவது அவசியம்

உயர் கல்வியைப் பெறும் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகுவது தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பது அவசியம் என தெரிவித்த பிரதமர் வேண்டுமென தெரிவித்துள்ள பிரதமர் ஹறிணி அமரசூரிய, எந்தவொரு காரணங்களுக்காகவும் பிள்ளைகளுக்கான கல்வி சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். மஹறகம தேசிய கல்வி நிறுவனத்திற்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்,

தற்காலத்தில் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் பிள்ளைகள் தொடர்ச்சியாக இருப்பது மிகவும் குறைவாகவே உள்ளது. விசேடமாக ஆண் பிள்ளைகள் கல்வி செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்வது அதிகரித்துள்ளது. எந்தவொரு சமூக, பொருளாதார காரணங்களை அடிப்படையாக கொண்டும் பிள்ளைகளுக்கான கல்வி சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. குழந்தை பருவ வளர்ச்சியிலிருந்து 13 வருடகால பாடசாலை கல்வி உட்பட உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அனைத்து பிள்ளைகளுக்கும் பகிரங்கமாக காணப்பட வேண்டும்.



மக்கள் கோரிய சமூக பரிணாமத்தை முன்னெடுப்பதற்கென பரிணாமமடைந்த கல்வி மாற்றத்தை மேற்கொள்வதன் ஊடாக இந்த நாட்டின் பிள்ளைகளுக்கு புதிய உலகில் கால் பதிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது அரசு செயற்படுகிறது.

சமூகத்திற்கு பொறுப்புக்கூறும் பிரஜையை உருவாக்குவதற்கென கல்விக்காக ஒதுக்கப்படும் ஒவ்வொரு மூலதனத்தையும் நாட்டின் எதிர்கால முதலீடாகவே நாம் பார்க்கின்றோம். நீண்டகால பிரதிபலன்களைக் கொண்டுள்ள இந்த உணர்வுபூர்வமான வேலைத்திட்டங்கள் குறித்து தேசிய கல்வி நிறுவனத்திற்கு விசேட பொறுப்புக்கள் காணப்படுகிறது என பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்**: இன்று தன்னிச்சையாகவும் நம்பிக்கையுடனும் செயல்படுவீர்கள்.

**ரிஷபம்**: ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் செய்து வருவது சிறந்தது.

**மிதுனம்**: இன்று மந்தமான நாளாக இருக்கும்.

**கடகம்**: இன்று வெற்றிகரமான பலன்கள் காணப்படும்.

**சிம்மம்**: உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சாதகமான பலன்கள் காணப்படும்.

**கன்னி**: இன்று எல்லா செயல்களிலும் யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

**துலாம்**: இன்று விருப்பமான பலன்கள் கிடைக்க சாதகமான நாள் அல்ல.

**விருச்சிகம்**: இன்று உங்களிடம் மகிழ்ச்சியான எண்ணங்களும் செயல்களும் காணப்படும்.

**தனுசு**: இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது.

**மகரம்**: உங்களுக்கு கவலை அளிக்கும் வகையிலான சூழ்நிலைகள் இன்று காணப்படும்.

**கும்பம்**: இன்று உங்கள் செயல்களில் விழிப்புணர்வு தேவை.

**மீனம்**: இன்று உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 02:44 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 12:58 வரை திருவோணம் பின்பு அவிட்டம்.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** புனர்பூசம்,பூசம்.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**குளிகை:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**எமகண்டம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

### ஆளில்லா விமானம் மீட்பு சம்பவம்

# நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லை

### விசாரணைக்குழு அறிக்கை

(ஆர்.மனோசங்கர்)




திருகோணமலை கடற்பரப்பில் அண்மையில் மீட்கப்பட்ட ஜெட் மூலம் இயங்கும் இலக்கு ட்ரோன், நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழு சமர்ப்பித்த இறுதி அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை தளபதியிடம் இறுதி அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் 27ஆம் திகதி மீனவர்கள் குழுவால் கண்டுபிடிக்கப்பட்ட ட்ரோன், ஒரு இந்திய நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதுடன், பயிற்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது என்பது விசாரணையில் தெரியவந்தது.

ட்ரோன் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு அது சுமார் இரண்டு வாரங்கள் கடலில் மிதந்துகொண்டிருந்ததாகவும் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் இலங்கையின் பாதுகாப்பில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றும், நாட்டிற்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது என்றும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, ட்ரோன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என்று இலங்கை விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மஹறகம அபேக்ஷா வைத்தியசாலையில் இரத்த அணுக்கள் மாற்று பிரிவு திறப்பு



இலங்கை விமானப்படையின் பங்களிப்பு மற்றும் ருஹுணு கதிர்காமம் மஹா தேவாலயவின் நிதி அனுசரணையுடன், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான எலும்பு மஜ்ஜை (bone marrow) மற்றும் இரத்த அணுக்கள் மாற்று சிகிச்சை பிரிவு மஹறகம அபேக்ஷா வைத்தியசாலையில் நேற்று (02) திறந்துவைக்கப்பட்டது.

ருஹுணு மகா கதிர்காம விகாரையின் நிதியுதவி மற்றும் இலங்கை விமானப்படையின் முழு உழைப்பு மற்றும் பங்களிப்புடன் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக அரச வைத்தியசாலையில் கட்டப்பட்ட முதலாவது மற்றும் ஒரேயொரு எலும்பு மஜ்ஜை மற்றும் இரத்த அணு மாற்று சிகிச்சை பிரிவின் திறப்பு வைபவம் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் அனில் ஜாசிங்க, விமானப்படைத் தலைவர் எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் கதிர்காமம் விகாரையின் பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர ஆகியோரின். பங்களிப்பில் மஹறகம அபேக்ஷா வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

மஹறகம அபேக்ஷ வைத்தியசாலையின் சிறுவர் வார்டுகளில் சிறுவர்களுக்கான இடப்பற்றாக்குறை காரணமாக ருஹுணு மஹா கதிர்காம விகாரை மற்றம் விமானப்படையின் உழைப்பு பங்களிப்புடன் நான்கு மாடி வார்டு வளாகமாக கட்டப்பட்டு 2024 இல் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு கட்டப்பட்ட நான்குமாடி கட்டிடத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது தளங்களை பயன்படுத்துவதன் மூலம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வாழ்வின் நம்பிக்கை வழங்கும் வகையில் ஒரு புதிய எலும்பு மஜ்ஜை மற்றும் இரத்த அணுக்கள் மாற்று சிகிச்சை பிரிவு நிறுவப்பட்டது . இதன்போது எதிர்கால பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை விமானப்படையின் பங்களிப்பை வழங்குவதற்கு விமானப்படைத் தளபதி தனது உடன்பாட்டை வெளிப்படுத்தினார்.

# மீன் கழிவுகளை வீதியில் வீசிய வர்த்தகருக்கு பொதுமக்கள் விநோத தண்டனை





கம்பளை பிரதேசத்தில் மீன் விற்பனை நிலையமொன்றின் கழிவுகளை நாளாந்தம் வீதியோரத்தில் வீசிவிட்டுச் செல்லும் வர்த்தகர் ஒருவருக்கு பொதுமக்கள் நூதனமான முறையில் தண்டனை வழங்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் முன்னதாக தயாராக இருந்த பொதுமக்கள், குறித்த வர்த்தகரின் வாகனத்தை முற்றுகையிட்டு நிறுத்தி, அவர் வீதியோரத்தில் கொட்டிய மீன் கழிவுகளை அள்ளி அவரது வாகனத்துக்குள்ளேயே வீசியுள்ளனர். அதன் பின்பு சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்து, வர்த்தகரையும் அவருடன் வந்தவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

### மாடிக்குடியிருப்பிலிருந்து விழுந்த மாணவன் உயிரிழந்த சம்பவம்

# சட்ட நடவடிக்கைக்கு தயாராகும் தாய்

(ஆர்.மனோசங்கர்)



கடந்த ஜூலை மாதம் கொழும்பில் உள்ள அதி சொகுசு தொடர்மாடி குடியிருப்பான அல்டயாரில் இருந்து இரு மாணவர்கள் விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கொழும்பில் சர்வதேச பாடசாலை ஒன்றில் 10ஆம் தரத்தில் பயிற்ற மாணவன் மற்றும் மாணவி என இருவர் இந்த சம்பவத்தில் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இந்த சம்பவத்தில் உயிரிழந்த ஜிவோன் ஜோரோ சிங் என்ற 15 வயது மாணவனின் மரணத்திற்கு அவரின் தாயார் நீதி கோரி போராடி வருகின்றார்.பாடசாலையின் அலட்சியமும் கவனமின்மையுமே இந்த துயர சம்பவத்திற்கு காரணம் என ஜிவோனின் தாயார் குற்றம் சாட்டியுள்ளார்.

குறித்த சம்பவம் இடம்பெற்ற நாளில் நடந்த நிகழ்வுகளுக்கு விளக்கம் கோரி பாடசாலைக்கும் அதன் உயர் நிர்வாகிகளுக்கும் ஜிவோனின் பல கடிதங்கள் எழுதியதாகவும் எனினும், அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்து பாடசாலை தரப்பில் இருந்து பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும் ஜிவோனின் தாயார் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது மகனுக்கு நீதி வழங்கப்படுவதை உறுதி செய்ய மற்றொரு படி முன்னேறி, ஜிவோனின் தாயாரான மோனா ரோக்கி, சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாக அறியமுடிகின்றது.

இதன் ஒருபடியான பாடசாலைக்கு அனுப்பியுள்ள கோரிக்கை கடித்தில் 5 கோடி ரூபாய் இழப்பீடு கோரியுள்ளார். மேலும், அந்தக் கடிதத்தில், 'பாடசாலையின் அலட்சியப் போக்கும், கவனக்குறைவுமே ஜிவோனின் அகால மரணத்திற்கு நேரடிக் காரணமாக அமைந்தது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அல்டயார் கட்டட வளாகத்தில் இருந்து விழுந்து உயிரிழந்த மற்றொரு மாணவி ரோஸும், ஜிவோனும் பிற்பகல் 2.20 மணியளவில் பாடசாலையில் விட்டு வெளியேறியதை பாடசாலையின் சிசிடிவி காட்சிகள் காட்டுகின்றன. எனினும், பிற்கபல் 4.32 மணிக்கே பாடசாலை தரப்பில் இருந்து தனக்கு தகவல் தெரிவித்ததாக மோனா தெரிவித்துள்ளார். அதேநேரம், ரோஸின் பெற்றோருடன் பிற்பகல் 3.00 மணிமுதல் பாடசாலை தொடர்பில் இருந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“அவர்கள் எனக்கு முன்பே தெரிவித்திருந்தால், நான் என் மகனைக் காப்பாற்றியிருக்க முடியும். கிடைக்கக்கூடிய ஆதாரங்களின்படி, என் மகன் மாலை 4.45 மணியளவில் விழுந்து உயிரிழந்தார் என்று நான் நம்புகிறேன். பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பாடசாலை தரப்பினரும், ரோஸின் பெற்றோரும் என் மகனுடன் தொடர்பில் இருந்தனர், மேலும் அந்த நேரத்தில் அவர்கள் பொலிஸாரையும் தொடர்புகொண்டுள்ளனர்.

அவர்கள் ஏதோ ஆபத்தை உணர்ந்த நிலையிலேயே பொலிஸாரை தொடர்பு கொண்டனர் என்று மோனா மேலும் தெரிவித்துள்ளார்.

# காற்றாலை மின்சார உற்பத்திக்காக மன்னாரில் மரங்கள் அழிப்பு; மக்கள் எதிர்ப்பு நடவடிக்கை

(எஸ்.ஆர்.லெம்பேட்)



மன்னார் தாழ்வுப்பாடு பகுதியில் காற்றாலை மின்சார உற்பத்தி வேலைத்திட்டத்துக்காக பலன் தரும் மரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டு, வீதியில் மண் கொட்டப்பட்டமைக்கு எதிராக நேற்று (02) அப்பகுதி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தாழ்வுப்பாடு கடற்கரையில் அமைந்துள்ள மணல் திட்டுகளில் மணல்கள் எடுக்கப்பட்டு வீதியின் அருகில் போடப்பட்டுள்ளமை தொடர்பில் கிராமத்தின் முக்கியஸ்தர்கள் மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் பிரஜைகள் குழு மற்றும் அருட்தந்தையர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றனர். இந்த நிலையில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையை அவதானித்ததோடு,உடனடியாக வேலைத்திட்டத்தை இடை நிறுத்தினர்.

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையை ஆராய்ந்தார். இதன்போது மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டு, கடற்கரை மணல் திட்டுகள் ஜே.சி.பி. இயந்திரத்தினால் அகழப்பட்டு வீதிக்கு அருகில் போடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய கிராமமக்கள் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் காற்றாலை மின்சாரம் அமைப்பதற்கான வேலை திட்டம் அமைப்பது தொடர்பாகவே வீதி புனரமைக்கப்படுவதாக மக்கள் இதன் போது விசனம் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் நாளை (இன்று 03) இடம்பெறும் மன்னார் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## உப்புக் கரிக்கும் அரசியல்

உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மன்னார், ஹம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் அதற்குத் தீர்வாகப் பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்ததற்கமைய, அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உப்பை ஜனவரி 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை பொறுத்தவரையும், உணவின் அடி நாதமான அத்தியாவசிய பொருட்களில் ஒன்றாக உப்பு உள்ளது. பொதுவாக இலங்கையில் சமையலுக்கு பயன்படுத்தப்படும் கனிம உப்பு சோடியம் குளோரைட் (Nacl) என்ற இரசாயன பெயரால் அழைக்கப்படுகிறது.

இந்த உப்பு விலங்குகளின் உடல் நலத்துக்குத் தேவையான ஒரு முக்கியமான பொருளுமாகும்.

கடல் நீரில் உப்பு மிக அதிக அளவில் காணப்படுகிறது. திறந்தவெளி கடலில் உள்ள கடல் நீர், ஒரு லீற்றருக்கு 35 கிராம் உப்பைக் கொண்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதன் உவர்ப்புத்தன்மை 3.5 சதவீதம் ஆகும் என்றும் சொல்லப்படுகிறது.

எப்படிப் பார்த்தாலும் மனித உணவின் இன்றியமையாத பகுதியாக உப்பு அமைந்துள்ளது. பொதுவாக உப்பு உயிர்வாழ்வதற்கு மிகவும் முக்கியமான ஒரு கனிமம் என்ற நிலை உருவாகி இருக்கிறது.

இலங்கையை பொறுத்தளவில், உப்பை பயன்படுத்தும் வீதம் அதிகரித்திருக்கின்றது என்று சுகாதார அமைச்சு கூறுகிறது. கடந்த காலங்களோடு ஒப்பிடுகின்ற பொழுது, ஒரு மனிதனுடைய சாதாரண தேவையை விடவும், ஒன்பது வீதம் அதிகரித்திருப்பதாக சுகாதார ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையில் நிகழும், மரணங்களில் 39 வீதமானோருக்கு, உயர் இரத்த அழுத்தமே காரணம் என்று கண்டறியப்பட்டிருக்கின்றது. உணவில் தேவைக்கு அதிகமான உப்பை, சேர்த்துக் கொள்வதே இதற்கான முக்கிய காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். உப்பினுடைய பயன்பாடு பாரம்பரியமாக இருந்தாலும், "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்ற நிலையை உருவாக்கும் என்பதற்கு, முக்கிய எடுத்துக்காட்டாக இதனை காண முடியும்.

புத்தளம், ஹம்பாந்தோட்டை, மன்னார் கிண்ணியா போன்ற இடங்களில் பெரிய அளவிலான உப்பளங்கள் மூலம் இலங்கை நீண்ட காலமாக தன்னிறைவுடன் உப்பு உற்பத்தி செய்து வந்தது.

இருப்பினும், சமீபத்திய காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட பெருமழை, வெள்ளம் உப்பு உற்பத்தி செயல்முறையிலுள்ள பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளது. ஆகவே, நமது உப்பு உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றை உறுதி செய்ய என்ன செய்யலாம் என்பதை துறைசார்ந்தவர்கள் ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவது ஆரோக்கியமான ஒரு நிலையை உருவாக்கும்.

இதேபோல, உப்பு உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவி, நிதியுதவி, பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் உள்ளூர் உப்பு உற்பத்தியை ஊக்குவிப்பதும் அவசியமானதொன்றாக இருக்கின்றது.

எமது உப்பையும் அயடீன் சேர்க்கும் தொழில் நுட்பத்திற்குள் உள்வாங்கினால் உப்பின் தரத்தை அதிகரிக்க முடியும் என உற்பத்தியாளர்கள் கூறுகின்றார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உப்பு முக்கிய பங்காற்றினாலும், உற்பத்தியை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் இதுவரை முறையாக எடுக்கவில்லை என்று உற்பத்தியாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை, கிண்ணியா போன்ற பிரதேசங்களில் உப்பு உற்பத்தியாளர்கள் இன்னுமொரு பிரச்சனையை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றார்கள். கிண்ணியா உப்பு உற்பத்தியாளர்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் இதுவரை வழங்கப்படாமல் இருப்பது உப்பு உற்பத்தியாளர்களை பாதிப்பதாகவும் கூறுகின்றார்கள். இந்தக் காணி தொடர்பான முழு அதிகாரம் கொண்டவர் பிரதேச செயலாளர். எனவே, உப்பளக் காணியை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், மக்கள் ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உப்பு என்பது ஒரு பொருள் என்பதைத் தாண்டி, அது இலங்கையின் பொருளாதாரத்துக்கும் பண்பாட்டுக்கும் முக்கியமானது. இந்த துறையைப் பாதுகாக்கவும் வலுப்படுத்தவும் அரசாங்கம் துரிதமான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

உப்பு உற்பத்தி துறையில் ஈடுபடுகின்றவர்கள், வாழ்க்கை தரத்தை இழந்து நலிந்தவர்களாகவே இருக்கிறார்கள். கரை யோர பிரதேசங்களை அண்டிய இந்த உப்பளங்களில் வேலை செய்பவர்களின் வாழ்வாதாரங்கள் முறையாக பேணப்படு வதில்லை. இதுவும் உப்பு உற்பத்தியை பாதிக்கும் முக்கிய விடயமாகும். தொழிலாளர்களின்

வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் அதேவேளை, காலநி லையை எதிர்கொள்ளும் திறனையும் உருவாக்கிக் கொள்வோ மேயானால் உப்பு உற்பத்தியில் தன்னிறைவை எட்ட முடியும்.

இந்த நிலையில், உப்பு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் எடுத்திருக்கின்ற முடிவு, தற்காலிக ஏற்பாடாக இருந்தாலும், நம்மை நாமே செயல்திறன் அற்றவர்களாக முத்திரை குத்திக் கொள்கிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என்பதை மறுப்பதற்கு இல்லை. கடலால் சூழப்பட்ட உப்பு வளமுள்ள ஒரு நாட்டில், இயற்கை பேரழிவை காரணம் காட்டி, இறக்குமதி செய்வதை முன்னிலைப்படுத்தினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு வீழ்ச்சி கட்டமாக அமையும் என்பதை மறந்து விடக்கூடாது.

# "எட்கா" உடன்படிக்கை இலங்கைக்கு தேவை தானா ?



இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையில் ஆலோசிக்கப்படும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையான எட்கா (ETCA) உடன்படிக்கை தொடர்பாக மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது. இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இந்தியாவிற்கு கடந்த 15 ஆம் திகதி பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன் போது இந்தியாவின் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடிய பின்னணியிலேயே, எட்கா சர்ச்சை மீண்டும் எழுந்துள்ளது. இலங்கையில் எட்கா உடன்படிக்கை தொடர்பில் கலந்துரையாடல்களை ஆரம்பித்த தருணம், அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி (JVP) எதிர்க்கட்சி ஆசனத்திலிருந்து இந்த உடன்படிக்கையை கடுமையாக விமர்சித்திருந்தது. இவ்வாறான பின்னணியில், அநுர குமார திஸாநாயக்க ஆட்சி பீடம் ஏறிய பிறகு, இந்தியாவுடன் இந்த உடன்படிக்கை குறித்து கலந்துரையாடியமையே இந்த சர்ச்சைக்கான காரணமாக அமைந்துள்ளது.

"இரு தரப்புகளுக்கும் இடையில் வர்த்தக நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக எட்கா உடன்படிக்கையை உடனடியாக கைச்சாத்திட முயற்சிக்கின்றோம்" என இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் கூட்டாக நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இந்த கருத்தானது, எட்கா உடன்படிக்கை குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடல் நடத்தியிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளது. எட்கா உடன்படிக்கைக்கு கடும் எதிர்ப்புகளை வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணி (JVP) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (NPP) இன்று ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தியாவுடன் அந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவது குறித்து கலந்துரையாடியுள்ளதாக இலங்கை எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

எட்கா உடன்படிக்கையை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கைச்சாத்திடுவாராயின், இலங்கையை அவர் பாரிய அழிவு பாதையை நோக்கி தள்ளுகின்றார் என, பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில விமர்சித்துள்ளார். "இந்தியாவுடன் கைச்சாத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள எட்கா உடன்படிக்கை 2015ஆம் ஆண்டு பேசுபொருளாக மாறியது. இந்த எட்கா உடன்படிக்கைக்கு எதிராக தற்போதைய ஜனாதிபதியும், அவரது மக்கள் விடுதலை முன்னணியும் பாரிய போராட்டங்களை நடாத்தியது. அந்த போராட்டத்தில் நாங்களும் இருந்தோம். இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள எட்காவின் உள்ளடக்கத்தில் பிரச்சனை உள்ளது." என்று அவர் கூறுகிறார். இந்த உடன்படிக்கையில் உள்நாட்டு (இலங்கை) உற்பத்தியாளர்களை பாதிக்கும் வகையிலான விடயங்கள், தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள், ஊழியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் கடந்த 10 வருட காலமாக இந்த நாட்டில் பாரிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன என அவர் கூறுகிறார்.

"இந்த விடயங்களை தவிர்த்து, எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திட ஜனாதிபதி தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பாராயின், திரும்பி பார்க்க முடியாத பாரிய அழிவிற்கு இந்த நாட்டை அவர் தள்ளுகின்றார் என்பதை நாங்கள் மிகுந்த கவலையுடன் நினைவுபடுத்துகின்றோம்." என்று உதய கம்மன்பில தெரிவித்தார்.

### இலங்கை வெளியுறவு அமைச்சரின் விளக்கம்

இலங்கையில் எட்கா குறித்த சர்ச்சை எழுந்த நிலையில், அநுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது, ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கம் அளித்தார்.

"இரு தரப்பிற்கும் இடையில் இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அதில் முதலாவது புரிந்துணர்வு உடன்படிக்கையானது, எமது நாட்டிலுள்ள அரச சேவையாளர்களுக்கு எதிர்வரும் ஐந்து வருடங்களுக்காக இரண்டு வார பயிற்சி காலம் கிடைக்கும் வகையில் 1,500 அரச சேவையாளர்களுக்கு இந்தியாவினால் பயிற்சி பாடநெறி வேலைத்திட்டமொன்று வழங்கப்பட்டது. இரண்டாவது புரிந்துணர்வு உடன்படிக்கையானது, இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற வரி நடைமுறைகளில் இரு தரப்பு வரிகளை இல்லாது செய்யும் வகையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இவை தவிர, வேறு எந்தவொரு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவில்லை" என விஜித்த ஹேரத் தெரிவித்தார். கலந்துரையாடல்களை நடத்தியது என்பதை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக கருதப்படக் கூடாது என கூறிய அவர், எட்கா உடன்படிக்கை தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த பல காலமாக காணப்படுகின்றது என்றார். "இந்த கலந்துரையாடல்களை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளோமே தவிர, இந்திய விஜயத்தின் போது எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது என்பது போலியானது" என விஜித்த ஹேரத் மேலும் தெரிவித்தார்.

"எட்கா கைச்சாத்திடுவதில் கவனம் தேவை"

எட்கா போன்ற உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் போது மிகவும் கவனமாக கையாள வேண்டும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி தெரிவிக்கின்றார். "இந்தியாவிலிருந்து இலங்கைக்குள்ளே அதிகளவு ஊழியர்கள் வரக்கூடிய அல்லது நிபுணர்கள் வரக்கூடிய வகையிலான ஒழுங்குப்பாடு உடன்பாட்டில் இருப்பதாக இலங்கையில் இருப்பவர்கள் அது சம்பந்தமாக அச்சம் வெளியிடுகின்றார்கள். பிராந்தியத்தில் இருக்கின்ற வளர்ச்சியடைந்த நாடு என்று வருகின்ற போது இந்தியாவுக்கு நிறைய அனுகூலங்கள் இருக்கின்றன" என்கிறார் கணேசமூர்த்தி. மேலும், இந்தியா போன்ற நாடுகளில் இருக்கின்ற நிபுணர்கள் இலங்கைக்குள் வரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். இலங்கையில் தொழிலாளர் பற்றாக்குறை தற்போது ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டும் அவர், இதனால் இலங்கைக்குள் இந்திய தொழிலாளர்கள் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் இதனாலேயே பலர் இந்த உடன்படிக்கையை பீதியுடன் பார்க்கின்றார்கள் எனவும் தெரிவித்தார். "அது தவிர, உடன்படிக்கையில் உள்ள தொழில்நுட்ப ரீதியான அம்சங்களை இலங்கைக்கு அனுகூலமாக மாற்றியமைக்கக் கூடிய வல்லமை உண்டு. உடன்படிக்கைகளில் ஈடுபடுகின்ற தரப்புகள் தங்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்களை தான் பார்க்கும். சில வேளைகளில் அச்ச நிலைமைகளும் இருக்கும். இதுபோன்ற உடன்படிக்கைகளை செய்யும் போது மிக கவனமாக செய்ய வேண்டும்" என அவர் தெரிவித்தார்.

### எட்கா தொடர்பிலான தீர்மானம் குறித்து செய்தியாளரின் பார்வை

முந்தைய காலங்களில் எட்கா உடன்படிக்கையை கடுமையாக விமர்சித்த அநுர குமார திஸாநாயக்க, எட்கா தொடர்பில் பிரதமர் மோடி கருத்துரைக்கும் போது எந்தவித பதிலையும் வழங்கவில்லை என மூத்த செய்தியாளர் ஆர்.சிவராஜா பிபிசி தமிழுக்கு தெரிவித்தார். "ஜனாதிபதி மிகவும் கவனமாக இருந்திருப்பார், ஏனென்றால், அடுத்த மாதம் சீனா செல்லும் போது அங்கேயும் அவருக்கு பேச வேண்டிய நிலைமை இருக்கும். இலங்கையை இந்தியாவிற்கு எதிராக பயன்படுத்த இடமளிக்க மாட்டோம் என அநுர குமார சொல்லியிருக்கின்றார். ஜனாதிபதி ஒருவர் அந்த வார்த்தையை சொல்லத் தேவையில்லை" என்றார். இறைமையாண்மை கொண்ட நாடான இலங்கை, இன்னொரு நாட்டிற்கு எதிராக தன்னை பயன்படுத்த இடமளிக்காது எனக்கூறும் சிவராஜா, அநுரவின் கருத்தால், வேறு நாடுகளின் ஆதிக்கம் இங்கு இருக்கின்றது என்பது போன்ற தோற்றப்பாடு வருகின்றது என கூறுகின்றார். எட்கா உடன்படிக்கையை இந்த அரசாங்கம் இந்தியாவுடன் கைச்சாத்திடாது என மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவராஜா தெரிவிக்கின்றார். "மோடி எட்கா உடன்படிக்கை தொடர்பில் கூற வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆனால், அவர் ஏன் கூறுகின்றார் என்றால், தங்களின் நிலைப்பாட்டிலிருந்து தாங்கள் மாறவில்லை. தாங்கள் இன்னும் உறுதியாக இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்தவே குறிப்பிட்டு கூறியிருக்கின்றார். அதேபோன்று, இலங்கைக்கு, கஷ்ட காலத்தில் நாங்கள் உங்களுடன் இருந்திருக்கின்றோம் என்று ஞாபகப்படுத்துகின்றார்" என அவர் தெரிவித்தார்.

"இந்த உடன்படிக்கை நாட்டிற்கு நல்லது. இந்தியா பொருளாதாரத்தில் சிறந்த நாடு. எனவே அது நல்லது. அதில் எந்தவித பாதிப்பும் இல்லை என்பது தனிப்பட்ட கருத்து. எனினும், சிங்கள கட்சிகள் அதனை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் எட்கா தொடர்பில் பேசும் போது, அது இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்பானது என்று பேசியவர் தான் இப்போதைய ஜனாதிபதி" என எட்கா உடன்படிக்கை தொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் சாதகமான கருத்தை தெரிவித்தார்.

"அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் சிறு விசனத்தில் இருக்கின்றார்கள். கோட்டாபய காலத்தில் இருந்த இப்படியான சிறு விசனங்கள் தான் பின்னர் பெரிய பிரச்சனையாக மாறின. இந்த நிலையில், செய்தியாளராக நான் அறிந்த விதத்தில் எட்கா உடன்படிக்கையை இந்த அரசாங்கம் கைச்சாத்திடாது" என ஆர்.சிவராஜா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.




ரஞ்சன் அருண் பிரசாத்
நன்றி பிபிசி

# நடுக்கடலில் பயணிகள் படகில் இயந்திர கோளாறு

## நெடுந்தீவு கடற்பறப்பில் கொந்தளிப்புக்கு மத்தியில் மீட்பு

(பு.கஜிந்தன்)

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் படகொன்று நடுக்கடலில் இயந்திர கோளாறு ஏற்பட்ட சம்பவத்தால் பயணிகள் அதிர்ச்சிக்குள்ளான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நெடுந்தீவில் இருந்து நேற்று முன்தினம் (01) பகல் 11:30 மணிக்கு குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபட்ட கரிகணன் பயணிகள் படகானது நடுக்கடலில் பயணித்த வேளை திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டு இயங்க மறுத்தது.



இதன்போது குறித்த படகில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், தென்பகுதி மக்கள் மற்றும் உள்ளூர் மக்கள் என சுமார் 60 பேருக்கும் அதிகமானோர் பயணித்த நிலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த படகானது கடல் கொந்தளிப்புக்கு மத்தியில் கடலில் தத்தளித்த நிலையில், இதனை அவதானித்த நெடுந்தீவு மக்கள் தமது சிறிய மீன்பிடி படகுகளைக் கொண்டு சென்று பயணிகளை ஆபத்திலிருந்து விரைந்து மீட்டதுடன் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் படகின் உதவியுடன் குறித்த பயணிகள் படகானது கரைக்குக் கொண்டுவரப்பட்டது. அதேவேளை, குறித்த படகுக்கு நெடுந்தீவு பிரதேச செயலாளர் மற்றும் ஊழியர்களும் விரைந்து சென்று நிலைமைகளை அவதானித்தனர். இச் சம்பவத்தால் படகில் பயணித்த மக்கள் பதற்றமான நிலையினை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டு தினத்தில் கத்திக்குத்து; ஒருவர் படுகாயம்

(கி.வசந்தன்)

வவுனியா இலுப்பையடி சந்தியில் புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில் இவ் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கத்திக்குத்துக்கு இலக்கானவர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மறுக்கப்படுகிறது

## யாழ்.மனித உரிமைகள் இணைப்பாளர்

(பு.கஜிந்தன்)



இலங்கை அரசியலமைப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும் நடைமுறையில் அது மறுக்கப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார்.

அண்மையில், சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக உரிமைகளை இழக்கும் விளிம்பில் உள்ளவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வருகிறது.

அந்தவகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கையில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு விசேட வேலைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் கல்வி கற்பதிலிருந்து தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்வது வரை அவர்களுக்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பு மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டும் அவர்கள் நடைமுறையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பாகக் கூற வேண்டுமானால் இலங்கை அரச வேலைவாய்ப்பைப் பெறுபவர் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும் எனக் கூறப்படுகிறது. அதுமட்டுமல்லாது தேக ஆரோக்கியம் தொடர்பிலும் வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக அமைகிறது.

குறிப்பாக வலுவிழந்தவர்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது அவர்களுக்கான வேலை வாய்ப்பினை எவ்வாறு வழங்குவது சித்திர வதைகளிலிருந்து அவ்வாறு பாதுகாப்பது மற்றும் பாரபட்சங்களிலிருந்து எவ்வாறு விடுவிப்பது போன்ற விடயங்களை உள்ளடக்கி மனித உரிமைகள் ஆணைக்குழு விசேடமான ஒரு வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த உள்ளது.

அரச கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் அல்லது வலுவிழந்தவர்கள் தாமாகச் சென்று தமது சேவைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் இருந்தும் தற்போது புதிய கட்டடங்கள் கட்டப்படும் போது குறித்த நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது குறைவாக உள்ளது.

ஆகவே வட மாகாணம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் பல ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் உள்ள நிலையில் அவர்களின் தேவைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பளையில் பெருந்தொகை கஞ்சாவுடன் இருவர் கைது

(பு.கஜிந்தன்)



இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பளை – தம்பகாமம் பகுதியில் நேற்று பெருமளவான கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது சொரம்பட்டு பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும், தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரும், 23 கிலோ 165 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் இருவரும் சான்றுப்பொருட்களுடன் பளை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் திருவாசக முற்றோதல் நிகழ்வு

இலங்கை சைவசமயப் பேரவையின் ஏற்பாட்டில் யாழில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அந்தவகையில் வெள்ளிக்கிழமை (03) காலை 6 மணி முதல் யாழ் சுதுமலை திருலிங்கேச்சரம் மரகதவல்லித்தாயார் உடனுறை கயிலைநாதர் திருக்கோயிலில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில்,ஈழத்தின் ஓதுவார் மூர்த்திகள் சிவத்திரு நவரட்ணம் பரந்தாமன் ஐயா கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரு வருடங்கள் பழைமையான சடலத்தைத் தோண்டுமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

(பு.கஜிந்தன்)

மன்னார் நீதிமன்றத்தில் விபத்து தொடர்பான வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட நபரான ஜேசுதாசன் ரஞ்சித்குமார் (வயது 40) என்பவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் – கல்லூண்டாயில் உள்ள சேமக்காலையில் அவரது உடலம் அடக்கம் செய்யப்பட்டது. இந்நிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக அவரது சடலத்தைத் தோண்டுமாறு மல்லாகம் நீதிமன்றம் விசேட உத்தரவு பிறப்பித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மன்னார் – இலுப்பை கடவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். குணமடைந்த பின்னர் நவாலி பகுதியில் வசித்து வந்துள்ளார். இந்த விபத்து சம்பவம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்திலும் வழக்குப் பதியப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்ததாக வைத்தியர் ஒருவர் தெரிவித்த நிலையில் கிராம சேவகரும் அதற்கு இணங்க பூர்வாங்க செயற்பாடுகளை மேற்கொண்டார். இந்நிலையில் கல்லூண்டாய் சென். பீற்றர் தேவாலய சேமக்காலையில் அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இது இவ்வாறு இருக்கையில் குறித்த நபர் மீதான விபத்து மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபர் அங்குப் பிரசன்னமாகவில்லை. குறித்த நபர் உயிரிழந்து, அவரது சடலம் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்ட விடயம் அதன்பின்னரே நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்தவகையில் சடலத்தைப் புதைத்த பகுதி மல்லாகம் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் உள்ளமையால் இது குறித்து மல்லாகம் நீதிமன்றத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் குறித்த நபரின் சடலத்தை இன்று 03 ஆம் திகதி தோண்டி எடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இன்று சடலம் மல்லாகம் நீதிமன்ற நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி, தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகளின் முன்னிலையில் தோண்டப்படும்.

# யாழில் இளம் குடும்பப் பெண் திடீர் மரணம்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் தூக்கத்திலேயே உயிரிழந்துள்ளார். அரியாலை பகுதியை சேர்ந்த பிரபாகரன் சுவேக்கா (வயது 30) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த பெண் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் உணவு அருந்திவிட்டு படுத்துறங்கியுள்ளார். பின்னர் குறித்த பெண்ணின் தாயார் மதிய உணவுக்காக அவரை எழுப்பியவேளை அசைவற்று காணப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சடலமானது உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# புளியம்பொக்கணையில் இரு சடலங்கள் மீட்பு



கிளிநொச்சி, பரந்தன் முல்லைத்தீவு ஏ- 35 வீதியில் அமைந்துள்ள புளியம்பொக்கணை 10ஆம் கட்டை பாலத்திற்கு அடியிலிருந்து இருந்து இரு ஆண்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது

இவ்வாறு மீட்கப்பட்ட இரண்டு சடலங்களையும் சம்பவ இடத்திற்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் 71 ஆயிரத்து நூறு ரூபா பணமும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்ட பாலத்தின் உட்பகுதியில் விழுந்ததன் காரணமாக இருவரும் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

சடலங்கள் நீரில் அமிழ்ந்த நிலையில் இருப்பதால் விபத்து நடந்து இரண்டு நாட்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் தரும்புரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

இருவரும் ஜெய்க்கா வீட்டுத்திட்டம் இக்பால் நகர் நிலாவளி பகுதியைச் சேர்ந்த அன்ரன் சாந்தன் 23 வயதுடையவரும் அதே பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சசிகரன் சிம்புரதன் ஆகிய இருவரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பாலத்தின் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுக் காணப்படும் நிலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு இது போன்ற உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# வவுனியாவில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் ஆராய்வு



(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று (02) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. குறித்த கூட்டமானது வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, கணகராயன்குளம் தெற்கு அபிவிருத்தி சங்கத்தின் காணியை பொலிஸாரின் பாவனையில் இருந்து விடுவித்தல், பொருளாதார மத்திய நிலையத்தினை திறப்பது உட்பட பல்வேறு மிக முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அதற்குரிய தீர்மானங்களும், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டிருந்தன.

கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம், து.ரவிகரன், முத்துமுகமது மற்றும் மாவட்டச் செயலாளர் சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் திரேஷ்குமார், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸார், இராணுவ உயர் அதிகாரி, கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தகர்ந்துவிடா பயணம் – அம்பை

எழுத்தாளராகவும், ஆய்வாளராகவும், செயற்பாட்டாளராகவும் தன்னுடைய கருத்தியல் வாழ்வினை மேற்கொள்ளும் சி.எஸ். லட்சுமி எனப்படும் அம்பை எழுத்துலகில் மிக முக்கியமானவர். மிகத் தீவிரமான தன்னுடைய கருத்துகளை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தும் அம்பை சமூகத்தின் ஆழமான நம்பிக்கைகள் மீது பல கட்டுடைப்புக்களைச் செய்துள்ளார். 1960 களில் எழுதத் தொடங்கிய இவரின் பணி பெண்ணிய எழுத்துலகில் மிக



முக்கியமானதாகும். சாதி, மதம், தேசியம் ஆகியவற்றின் மீது தீர்க்கமான பல விமர்சனங்களை முன்வைக்கும் அம்பை விசித்திரமான விவாத எழுத்தினைக் கொண்டவர். அந்தி மாலை, சிறகுகள் முறியும், வீட்டின் மூலையில் ஓர் சமயல் அறை, காட்டில் ஒரு மான், சக்கர நாட்காலி, ஸஞ்சாரி, தண்ணியடிக்க, வற்றும் ஏரியின் மீன்கள், பயணப்படாத பாதைகள், சொல்லாத கதைகள் போன்ற பல படைப்புக்களை தமிழ்ச் சூழலிற்கு வழங்கியதோடு ஆங்கிலத்திலும் பல தொகுதிகளை வெளியிட்டுள்ளார். நீட்சியான ஆய்வுத் தன்மையும், அற்புத மொழிநடையினையும், நக்கலும், நையாண்டியும் கொண்ட இவரின் பல கதைகள் உலகக் கவனம் மிக்கவை. மரபாக பின்பற்றி வரும் ஒழுங்கற்ற பெண்ணிய சடங்குகளின் மீது தன்னுடைய வெளித்தரமான விமர்சனத்தினை முன் வைப்பவர்கள் மிக சொற்பமானவர்களே. அம்பையின் எழுத்துக்கள் இவற்றிற்கு முற்றிலும் மாற்றமானவை. சமூகப் பரப்பின் மீது தன்னுடைய கருத்துக்களை திணிக்காமல் சமூகம் கொண்டிருக்கின்ற மூர்க்கத்தனமான நம்பிக்கைகளின் மீது தன்னுடைய எழுத்துக்களை வெளிப்படுத்துபவராகவே அம்பை இருக்கிறார். தன்னுடைய எழுத்துக்களின் மீதும், அவ்வெழுத்துக்களை செயற்பாட்டாளராக நின்று செயற்படுத்துவதின் மீதும் முழு நம்பிக்கை கொண்டியங்கும் அம்பை எழுத்துக்களின் தன்மானம் காக்கின்ற ஒரு அற்புதமான பெண்ணிய விடுதலைப் படைப்பாளி.

தமிழ், ஆங்கிலம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் பாண்டித்தியமும். அமெரிக்கன் ஸ்டடிஸில் முனைவர் பட்டமும் பெற்ற இவர் தங்கராஜ் எங்கே எனும் சிறுவர் திரைப்படத்திற்கு வசனம் எழுதியும், முதல் அத்தியாயம் எனும் சிறுகதையைத் திரைப்படமாகவும் தயாரித்துள்ளார். பெண்ணிய வாழ்வியலின் உறவு நிலை, குழப்பங்கள், வெளிப்பாடுகள், நேரடித் தன்மைகள் என தன்னுடைய பரப்பினை விரிவாக்கிக் கொண்ட அம்பை எழுத்தியக்கத்தினுல் மட்டும் தங்கி விடாமல் செயற்பாட்டாளராக தன்னுடைய பணியினை மேற் கொள்ளும் விரிந்த தளத்தின் உரிமையாளராவார். பெண்ணியத்தின் அழகியலினை தனது படைப்புக்களின் மூலம் பெருத்த சூழலின் பேசு பொருளாக அரங்கேற்றிய அம்பை காலத்தின் வினை புரியும் ஆளுமை.

# சூழலை போற்று - வான்காரி மாத்தாய்

2004 ம் ஆண்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பின் வழிதொட்டு அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்ற வாங்காரி மாத்தாய் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பே மாற்றத்துக்கான பெண்கள். பூவுலகின் நண்பர்கள் இதனை தொகுப்பாக வெளியாக்கியிருக்கின்றனர். தற்காலப் பெண்களின் அடிமைச் சிறை மீது கல் வீசி கலைக்கின்ற பெரும் பங்கின் பிரதியாகவே இதனை நோக்கலாம். பிரதிகள் கொண்டிருக்கின்ற அரசியல் காத்திரமானவை. அவற்றிலிருந்து தொடர முனைகின்ற உரையாடல்களின் வார்ப்பினை பெருத்த வாசிப்புக்களே தீர்மானிக்கின்றன. ஒரு பிரதி இயங்குகின்ற இருப்பியல் சார்ந்த வடிவத்தின் வழியே ஏராளமான சிதைவுகளை நெறிப்படுத்த முடியும். காலத்தின் அடையாளப் போக்கினை ஆக்கிரமிக்கின்ற செயற்பாடுகளின் வெளிபற்றி தீர்க்கமான ஒரு வாசிப்பினை அரசியல் பிரதிகளால் மட்டுமே உருவாக்க முடியும். பிரதிகள் மீதான அரசியல் என்பது அவற்றின் கருத்தாடல்களில் தங்கிக் கொண்டவையே. சமூகத்தின் அக்கறை சார்ந்த பிரதிகளின் மீதும் அப்பாய்ச்சலினை எம்மால் நிரப்ப முடியும். பிரதிகள் வெளிப்படுத்தியிருக்கும் திறந்த வெளியில் ஏராளமான சொற்கள் உருவாகியிருக்கின்றன. பிரதிகளின் போக்கு முறை மாற்றமடைந்த சூழலில் இருந்து புதுவிதமான வாழ்வு




முறைகளும், வார்த்தைப் பிரயோகங்களும் இருப்பில் சேர்ந்து கொண்டன. விளிம்பு நிலையிலிருந்து பிறப்பெடுக்கத் தொடங்கியிருந்த அடிநிலைப் பொருட்கள் இன்று பெருவாரியாக எழுதப்படுகின்ற வடிவமாகியிருக்கிறது. நிலவினையும், காதலினையும் சுற்றி நகர்ந்து கொண்டிருந்த பிரதிகள் விடுதலையின் மீதும், நிலத்தின் அடையாளம் மீதும் தனக்கான வழியினை மாற்றிக் கொண்டன.

தொலைத்த இடத்தில் இருந்து தேடுவதை மறுதலித்து நினைத்த இடத்தில் கருவினை உருவாக்குகின்ற நவீன பிரதிகளின் வடிவமும், பிரதிகளின் பரந்துபட்ட சிந்திப்பில் ஒரு வகையான நியாயத்தன்மையுடனும், வாழ்வின் இருப்பியலுக்குரிய மிக நுணுக்கமான அரசியலினை அவை பேச முனைந்தன என்பது திருப்திகரமானதாகும்.

மாற்று அரசியல் சக்திக்கு நோபல் பரிசு, காட்டுத் தீயால் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் கானகத்தை காப்பாற்ற முயற்சிக்கும் சிட்டுக் குருவியாகவே இருக்க விரும்புகிறேன், உங்களுடைய போராட்டம் மனித குலத்திற்கு உத்வேகம் அளிக்கிறது, வாங்காரி மாத்தாயின் நோபல் உரை, கென்யா பசும்பட்டை இயக்கம், மரங்களே பிரச்சினைகளுக்குத் தீர்வு, நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதை பன்னாட்டு நிறுவனங்கள் தீர்மானிக்கலாமா? போன்ற தலைப்புக்களில் காத்திரமான வாசிப்பினை செலுத்தியிருக்கும் இத் தொகுதி உரிமையின் பிரதி பலனாகும்.




# தலைவர்களின் சினிமா - The god father 2

அமெரிக்க இயக்குனரான பிரான்ஸிஸ் போர்டு கப்பலோவினால் 1972 ல் இயக்கப்பட்டு கேங்ஸ்டார் கதைகளுக்கு மூல கர்த்தவாக மதிக்கப்படும் திரைப்படமே **The god father** 2 ஒரு உலக தாதாவின் விசித்திரமான கதையினை இத்திரைப்படத்தில் தரிசிக்கலாம். ஆரம்ப காலகட்டத்தில் கள்ளக் கடத்தல் காரனாக இருந்து பிறகு கெட்டவர்களின் தீய செயலுக்ககு தண்டனை வழங்குகின்ற மக்களால் ஆதரிக்கப்பட்ட தலைவனாக மாறுகின்ற காத்திரமான கதையினை இத்திரைப்படத்தில் காணலாம். ஒரு திரைப்படம் வெற்றி, தோல்வி எனும் எல்லைகளைத் தகர்த்து கதை சொல்லும் விதத்தில் மேம்போக்கானதாகவும், வணிக




அமைப்பில் லாபகரமானதாகவும் வெளிப்பட்டிருப்பதை உணரலாம். திரைப்படங்களின் வரலாற்று அமைப்பினை நோக்குகின்ற போது அவை கொண்டிருக்கின்ற பரப்பு மிக விசாலமானது. இதில் அச்சாணியாக அமையக்கூடிய தொடர்பு என்பது அத்திரைப்படத்தின் திரைக்கதை முறையினில் தங்கியிருப்பதினை அவதானிக் முடியும். சினிமாவின் உருவாக்கத்தில் பெரும் பங்களிப்பினைச் செலுத்துகின்ற திரைக்கதை முறையானது முழுக்க முழுக்க வணிகத்தின் செயற்பாடாகவும், முதலீட்டு வியாபாரமாகவும் ஆதிகாலம் தொட்டு செயல் முறையாக இருந்து வந்திருப்பதினை அவதானிக்கலாம். அடுத்ததாக சினிமாவில் நோக்க வேண்டிய முறை இயக்கம் என்பதுதான். இவ்வகையான முதலீட்டு செயற்பாடுகளே ஒரு சினிமாவின் வெற்றிக்கு முழுக் காரணியாய் அமைந்து விடுகிறது. இத்திரைப்படத்தினை பொறுத்தவரையிலும் திரைக்கதை அமைப்பினில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்திய படைப்பாகும். மரியா புஸோவின் நாவலினை மையமாகக் கொண்டு இயக்கப்பட்ட இத்திரைப்படம் காலத்தின் போக்கிலிருந்து அழிக்கப்பட முடியாத படைப்பாகும்.

உலக சினிமாவின் வரிசையில் காவியத் திரைப்படமாக கருதப்படும் இத்திரைப்படம் சிறந்த திரைக்கதை, சிறந்த திரைப்படம், சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதினைப் பெற்றுக் கொண்டது. இதில் விசித்திரமான நிகழ்வு யாதெனில் இத்திரைப்படத்தினை இயக்கிய பிரான்ஸிஸ் போர்டு கப்பலோ தனக்காக கிடைக்கப்பெற்ற ஒஸ்கார் விருதினை மறுதலித்து விட்டார். ஒரு காத்திரமானதும். சீரியசானதுமான படைப்புக்களை தரக் கூடிய கலைஞன் விருதுகளின் பக்கம் மூழ்கிவிட மாட்டான் என்பதற்கு இயக்குனர் பிரான்ஸிஸ் போர்டு கப்பலோ ஒரு சிறந்த உதாரணமாகும். இத்திரைப்படத்தில் நடித்த அத்தனை கதாப்பாத்திரங்களும் இன்றும் சினிமாவின் கதையாடலிலிருந்து மறக்க முடியாத பாத்திரங்களாவர்.

**The god father** 2ஒரு கேங்ஸ்டாரின் காவியப் படைப்பாகும்.

# சிறகுகள்

அவளின் கவிதைகள் பற்றிய நீண்ட உரையாடலில் முப்பது முறை அவனை விழுங்கிவிட்டாள். மீண்டும் அவனை கக்கிய போதெல்லாம் அவளை அவன் உற்றுப் பார்ப்பான். அவள் எல்லைகள் கடந்த உலகத்தில் நின்று அவனை அழைப்பாள். அவனால் நீண்ட தூரம் ஓடமுடியுமாயிருந்தது. அங்கிருந்து உரத்த குரலில் ஒரே ஒரு முறை என்னை அற்புதமானவன் என்று சொல் என கூப்பாடு போடுவான். அவள் கரைக்கு ஓடிவருவாள், அவளின் பின்னே ஓராயிரம் கவிதைகளும் ஓடிக் கொண்டேயிருக்கும். அவளை அவன் காதலிக்கவில்லை ஒரு அரண்மையின் மேல் முகட்டில் பத்திரப்படுத்தி வைக்கின்ற ராஜமாணிக்கத்தின் ஒளியினைப் போல, ஆயிரம் யானைகளைக் கொன்ற பரணியின் வீரத்தைப் போல், ஆழ் கடலில் சிப்பிகளின் நடுவே நீரினைத் தள்ளுகின்ற செம்மஞ்சள் நிற முத்தினைப் போல அவளை நேசித்தான். அவளை அவன் காதலிக்கவில்லை. ஒரே ஒரு தடவை அவனை அற்புதமானவன் என்று சொல் எனக் கெஞ்சினான். அவளுக்கு இரண்டு சிறகுகள் இருந்திருக்கக் கூடும். காடுகளில் பொதிக்கப்பட்ட அரண்மனைகளை அவள் ஊதிக் களைத்தால். அவன் காடுகளின் விலா எலும்புகளில் தொங்கிக் கொண்டிருந்தான். ஒரே ஒரு தடவை அவனை அற்புதமானவன் என்று சொல்லும்படி...



அவனுடைய போராட்டங்கள் சாம்ராஜ்ஜியங்களை கௌவிக் கொண்டன. அவன் குதூகலித்தான். சபதமிட்டுச் சிரித்தான். எங்கும் பரவிய அவனது சிரிப்பில் எல்லோரும் கலந்து கொண்டனர். நட்சத்திரங்களை எண்ணத் தொடங்கினான். நிலவிடம் ஒளியினைப் பற்றி நிறையவே கேள்வி கேட்டான். சத்தியமாய் அவன் நிறையவே கேள்வி கேட்டான். எந்தப் பதில்களையும் சொல்லாமல் ஓடிக் கொண்டது நிலவு. அவன் இன்னும் திருப்தியடையவில்லை. அவனுக்க வேண்டிய சொல் அவளிடம் தஞ்சம் கொண்டிருந்தது. அவள் சிறகுகளுடன் அவனைச் சந்தித்தாள். கதை சொல்வதற்கான எந்த சாடலையும் அவள் கொண்டிருக்கவில்லை. அவள் மிகத் தெளிவாகவே சொன்னாள். இந்த அடர்ந்த வனம் என்னைவிட்டு மறைகிறது, நான் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும் போய் வருகிறேன், இல்லை வரமாட்டேன். அவளிடமிருந்து ஒரு மழை இறங்கிக் கொண்டிருந்தது. பூமியில் விழுந்து நிலத்தினை பிளந்தது, இன்னும் அவளிடமே அந்த வார்த்தையும் இருந்தது...

# இராஜாங்கனையில் 10 வான் கதவுகள் திறப்பு



(எம்.ரீ.ஆரிப்)

நாடளாவிய ரீதியில் பெய்து வரும் மழையினால் இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் பத்து வான் கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்துவரும் கன மழை காரணமாக கலாவெவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளனு. இருந்தாலும் மேல் பகுதியில் பெய்து வரும் மழை காரணமாகவும் இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் நேற்றுமுன்தினம் பிற்பகல் பத்து வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான நீர்ப்பாசன பொறியாளர் சம்பத் சமரஜீவ தெரிவித்தார். நீர்த்தேக்கத்தில் எட்டு வான் கதவுகள் 06 அடி உயரத்திலும் இரண்டு வான் கதவுகள் 03 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள நீர்ப்பாசன பொறியாளர் சம்பத் சமரஜீவ இதனால் வினாடிக்கு 15,600 கன அடி நீர் கலாஓயாவுக்கு திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# 57 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களினால் அபராதம் விதிப்பு

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 57 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 91 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவின் ஆலோசனைக்கமைய கல்முனை,அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர். இதன்போது,நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 104 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். இதில் 57 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களிடமிருந்து 91 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் நீதிமன்றங்களால் அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராக மேற்படி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# திரௌபதியம்மன் ஆலய வருடாந்த கொடியேற்றம்



(க.மகாதேவன்)

உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள் திரௌபதியம்மன் ஆலய வருடாந்த பிரம்மோற்சவ உற்சவத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை கொடியேற்றம் இடம்பெற்றது. ஆலய நிர்வாக சபை பொருளாளர் ம.ரூபன் கொடிச்சீலையை தலையில் சுமந்த வண்ணம் உள் வீதியை சுற்றி வந்தார். பின்னர், ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ குமார பஞ்சாட்சர சிவாச்சாரியாரிம் வழங்கப்பட்டது.இதன் போது தேவ பாராயணம் பாடப்பட்டு கொடியேற்றம் நடைபெற்றதன் பின்னர் கொடித் தம்பத்திற்கு பால் அபிஷேகம் போன்றன இடம்பெற்றன. இந்நிகழ்வில் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளராக அஸ்மி கடமையேற்பு



(அபு அலா)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக நியமிக்கப்பட்ட இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான ஏ.எல்.எம்.அஸ்மி நேற்றுமுன்தினம் (01) கடமையை பொறுப்பேற்றார். இவர், அக்கரைப்பற்று மற்றும் கல்முனை மாநகர சபைகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர், அக்கரைப்பற்று மாநகராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர், பதிவாளர், கல்முனை மாநகராட்சி ஆணையாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) போன்ற பதவிகளையும் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி உதவி ஆணையாளராக பார்த்தீபன்



(ஏ.எச் ஹஸ்பர்)

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்ட இலங்கை நிருவாக சேவை அதிகாரி எஸ். பார்த்தீபன் நேற்றுமுன்தினம் (01) தனது கடமைகளை கல்லடியிலுள்ள அலுவலகத்தில் பொறுப்பேற்றார். 2015 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர், திருகோணமலை மாவட்ட முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக செயற்பட்டார். கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவி செயலாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு பிரதி ஆணையாளர் ஆகிய பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(எம்.யூ.எம்.சனூன்)

பொலனறுவை கதுருவல முஸ்லிம் கொலனி ஆக்ஸ்போர்ட் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகப்பைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பொலனறுவையில் நடைபெற்றது.

47 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு குவைத்தில் இயங்கி வரும் எல்.பீ. குறூப் மூலமாக இலவசமாக பாடசாலை புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தொழில் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் கலந்து கொண்டார்.பாலர் பாடசாலையின் தலைமை ஆசிரியை ஏ.அஷ்மின் சிப்தா மற்றும் ஆசிரியைகளான எச்.பீ.துஸாரி ராஜபக்ஷ, எஸ். எம்.ஜீ.மதுஷானி, என்.எல்.பீ.கே.குமாரசிங்க, என்.ஏ.நிர்மலா வசந்தி ஆகியோர் இந்நிகழ்வை சிறப்பாக நடாத்தினர்.

# பொஸ்பேட் நிறுவன தொழிலாளர் குழு வேலை வழங்கக் கோரி போராட்டம்



(எம்.ரீ.ஆரிப்)

எப்பாவள பொஸ்பேட் நிறுவனத்தில் தொழில் புரிந்த தொழிலாளர் குழுவொன்று தங்களுக்கு வேலை வழங்கக்கோரி நிறுவனத்தின் பிரதான நுழைவாயிலை முற்றுகையிட்டு நேற்றுமுன்தினம் (01) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒருவருட காலமாக பொஸ்பேட் நிறுவனத்தில் சாதாரண ஊழியர்களாக பணிபுரிந்த குழுவினரே இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். பொஸ்பேட் நிறுவனத்தில் ஏறக்குறைய ஒரு வருடமாக தொழில் புரிந்த தாங்கள் தற்போது அந்த நிறுவனத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் கடும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பில் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் முகாமையாளருடனும் பல தடவைகள் கலந்துரையாடிய போதும் உரிய பதில் கிடைக்காத காரணத்தால் இந்த போராட்டத்தை முன்னெடுப்பதாக தெரிவித்தனர்.

சுமார் நான்கு மணித்தியாலங்கள் போஸ்பேட் நிறுவனத்தின் பிரதான நுழைவாயிலை முற்றாக மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எப்பாவள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து தற்போதைய தலைவருடன் தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்க ஏற்பாடு செய்தார். பின்னர் பொஸ்பேட் நிறுவனத்தின் தலைவர் ஆனந்த குமாரகே அவ்விடத்திற்கு வருகை தந்து பொஸ்பேட் நிறுவனத்தில் நாளாந்த வேலையாட்கள் தற்போதைய நிலையில் தேவையில்லை யெனவும் எதிர்காலத்தில் அவ்வாறான தேவைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் நிறுவனம் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் என்றும் தெரிவித்தனையடுத்து போராட்டக்காரர்கள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர்.

# பயிரினங்களை சேதப்படுத்தும் குரங்குகள்

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ள தாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மாவட்டத்தில் அமைந்துள்ள களுதாவளை, களுவாஞ்சிகுடி, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம். குருக்கள்மடம் போன்ற பல பகுதிகளிலும் இவ்வாறு குரங்குகள் கிராமங்களுக்குள் உட்புகுந்து பயன்தரும், மா, தென்னை, வாழை, உள்ளிட்ட பயிரினங்களை சேதப்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் இந்நிலையில் அப்பகுதியில் செய்கைபண்ணப்பட்டுள்ள கத்தரி, வெண்டி, புடோல், மிளகாய், உள்ளிட்ட பல மேட்டுநிலப் பயிரினங்களையும், குரங்குகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# வான்-முச்சக்கர வண்டி விபத்தில் தாய் மரணம்;மகள், மகன் படுகாயம்

கேகாலை – அவிசாவளை வீதி அட்டால பிரதேசத்தில் வான் மற்றும் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதில் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பிந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர். அம்பே பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் கற்பிக்கும் அட்டாலை பிரதேசத்தைச் சேர்ந்த அனுஷா ஜயசேகர (52 வயது) என்ற ஆசிரியரே இதில் உயிரிழந்துள்ளார். குறித்த பெண், அவரது இரண்டு குழந்தைகளுடன் முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், எதிர் திசையில் வந்த வான் முச்சக்கர வண்டியுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கேகாலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்தில் காயமடைந்த மகள் மற்றும் மகன் கேகாலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் வான் சாரதி கரவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளது.

மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பின்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருதில் புஹாரி செரீப் பாராயணம்



சாய்ந்தமருது ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றுவரும் “புனித புஹாரி செரீப்“ பாராயணம் நேற்று (02) வியாழக்கிழமை பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா (ரஷ ாதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் பிரதித் தலைவர் எம்.எம்.எம்.இஸ்மாயில் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் மரைக்காயர்மார்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், ஜமாஅத்தினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(படம் : எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# புத்தளத்தில் மாபெரும் இரத்ததான நிகழ்வு

(எம். எச். எம். சியாஜ்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளை, புத்தளம் பெரிய பள்ளி, புத்தளம் வியாபார சங்கம், நஹ்தா அமைப்பு, புத்தளம் நகர சபை, புத்தளம் தள வைத்தியசாலை மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து நடாத்தும் மாபெரும் இரத்த தானம் நிகழ்வு நாளை 04 ம் திகதி சனிக்கிழமை புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள கிளினிக் சென்டரில் காலை 08.30 மணி தொடக்கம் 2.30 வரை நடைபெறவுள்ளது.

‘உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்’ என்ற அடிப்படையில் அனைவரும் வருகை தந்து தங்களின் உதிரத்தை கொடுத்து மற்றவர்களின் உயிர்களை காப்போம். என்பதுடன் உதிரம் கொடுப்பவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறும்.

இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளையின் உப செயலாளர் அஷ்ஷேக் இமாம் தீன் அஷ்ரபி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒடுக்கமான பாலத்தினால் பயணிப்பதில் அசௌகரியம்



(அபு அலா)

சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒடுக்கமான பாலத்தினால் பயணம் செய்வது ஆபத்தானது. மக்களின் பிரதான போக்கு வரத்துப் பாதைகளில் ஒன்றான இந்த வீதி,தோணாவுக்கு மேலாக குறுக்காக அமைக்கப்பட்டுள்ளதால் பயணிப்பதில் ஆபத்தாக உள்ளது. இந்தப் பாதையை சீரமைக்க அரசியல்வாதிகள் கவனம் செலுத்துவதாக தெரியவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப்பாலத்தை புனரமைப்பு செய்ய நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஏ. ஆதம்பாவா கவனம் செலுத்த வேண்டுமென அப் பிரதேசவாசிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

இப்பாலத்தின் ஊடாகத்தான் ஆஸ்பத்திரி உப தபாலகம், கமுஃ நியாலுல் ஜன்னா வித்தியாலயம், தலைவர் அஷ்ரஃப் ஞாபகர்த்த பூங்கா, சாய்ந்தமருது ஆயுர்வேத மருந்தகம், மஸ்ஜிதுல் சுஹதா பள்ளிவாசல், ஸ்ரீலங்கா யூத் சென்ரர் என்பனவற்றிற்கு செல்ல வேண்டும். மிக அபாயகரமான நிலையிலுள்ள இந்த ஒடுக்கமான பாலம் புனரமைக்கப்படல் வேண்டும்.

# மட். அரபா நகர், மஜ்மா நகர் மக்களுக்கு குடிநீர் வசதியில்லை

(எஸ்.சினீஸ் கான்)



மட்டக்களப்பு அரபா நகர், மஜ்மா நகர் பிரதேச மக்களுக்கு இதுவரை குடிநீர் வசதி கிடைக்கவில்லை. நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை சந்திவெளி திட்டம் முடிவடைந்தவுடன் குடிநீர் வழப்படும் என உறுதி வழங்கியிருந்தனர். ஆனால் தற்போது சந்திவெளி நீர் திட்டம் முடிவடைந்த நிலையிலும் இந்த அந்த கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கவில்லை இவற்றை கருத்திற்கொண்டு உடனடியாக குடிநீர் வசதிகளை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் வேண்டு கோள்விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத் திக்குழு கூட்டத்திலேயே இக்கோரிக் கையை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் விடுத்துள் ளார்.

இதற்கு பதிலளித்த நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட பிராந்திய பொறியியலாளர், தற்போது சந்திவெளி குடிநீர் திட்டம் முடிவடைந் தாலும் குடிநீர் பாசிக்குடா ஹோட்டல்க ளுக்கு வழங்கப் படுவதால் நீரின் அமுத்தம் போதாமை யுள்ளது. இதனால் குடிநீரை இப்பிரதேச மக்களுக்கு வழங்க முடியாமல் இருப்பதாக தெரிவித்தார்.

இதனைதொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப் பினர் ஹிஸ்புல்லாஹ், இக் கிராம மக்களுக்கு கிணற்றிலிருந்தும்கூட நீர் பெறமுடியாத நிலை காணப்படுகிறது. மக்களுக்கு நீர் வசதிகளை வழங்குவது உங்களது கடமை, உடனடியாக இந்த கிராமங் களுக்கு குடிநீர் வழங்குங்கள் என தெரிவித்தார்.

# வீதி ஓரங்களில் குப்பை கூளங்கள் பிரயாணிகளுக்கு ஆபத்து



(கியாஸ் ஷாபி)

கிண்ணியா பிரதேச சபை பிரிவுகுட்பட்ட, கொழும்பு பிரதான வீதியில், சிவப்பு பாலத்துக்கு அண்மித்த வீதி ஓரங்களில் குப்பை கூளங்கள் நிறைந்து காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, கிண்ணியா பிரதேச சபை இந்த விடயத்தில், உரிய கவனம் செலுத்தி, சுற்றுச்சூழலை பாதுகாக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு, மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

போத்தல்கள், பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன்கள், பழுதடைந்த உணவுப் பொருட்கள், வீட்டுக் கழிவுகள், உணவகங்களில் உள்ள மாமிச கழிவுகள் மற்றும் வைத்தியசாலை கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு கழிவுகள் இந்தத் தெரு ஓரங்களில் குவிந்து காணப் டுகின்றன.

இந்தப் பகுதியில், இனங் தெரியா தோரால், இரவு நேரங்க ளில், இவ்வாறான கழிவுகள் தொடர்ச்சியாக வீசப்பட்டு வருவதால் சுற்றுப்புற சூழலுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் அப்போது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த கழிவுகளை நாடி, யானைக ளும் முதலைகளும் இந்தப் பகுதியில், நடமாடி வருவதாகவும், இதன் காரணமாக அந்தப் பகுதியால் பிரயாணம் செய்வது ஆபத்தானதாக மாறி இருப்பதா கவும் பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

# அஸ்வெசும மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(இறக்காமம் ஜௌபர்)

இறக்காமம் பிராந்திய சமூர்த்தி சமுதாய அமைப்பினால் அஸ்வெசும பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 83 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சமூர்த்தி சமுதாய அமைப்பின் கௌரவ தலைவர் கே. நளீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் ஏ.கே. றொசிந் தாஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை ஒழிப்பு தினங்களின் ஊடாக கொடி விற்பனை செயல்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியை பயன்படுத்தி தலா 2000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அடங்கிய 83 பொதிகள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சமுர்த்தி மகா சங்கம் முகாமையாத்துவ பணிப் பாளர் ஏ.எல்.நௌபீர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எல்.யு.ஜுனைதா, வங்கி முகாமையாளர் எம்.ஏ.அப்துல் நஜீம், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் ஐ.எல்.எம்.மக்பூல் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# இன ஒற்றுமைக்கு மூதூர் பெரும்பங்களிப்பு

(கே.எ.ஹமீட்)



கிழக்கு மாகாண வரலாற்றில் இன ஒற்றுமைக்கு பெரும்பங்களிப்பு வழங்கிய மூதூர் மண்ணில் கல்வித் துறையில் சித்தியடைந்த தமிழ்–முஸ்லிம் மாணவர்களையும், துறை சார்ந்தவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறுவது பாராட்டத்தக்கதாகுமென அம்பாரை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

மூதூர் அனர்த்த சமூக சேவைகள் நலன்புரிச் சங்கத்தினால் மூதூர் பிரதேசத் தைச் சேர்ந்த பல்கலைக் கழகத்திற்கு தெரிவான தமிழ், முஸ்லிம் மாணவர்களையும் துறைசார்ந்தவர்க ளையும் கௌரவிக்கும் நிகழ்வு முன்னாள் திமர் மறண விசாரணை அதிகாரி எம்.வை. லாபிர் தலைமையில் மூதூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

மூவின மக்களும் வாழும் நமது கிழக்கு மாகாணத்தில் இன உறவுகளை வளர்த்தெடுக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்றார்.

# தொல்லியல் துறைக்கு எதிராக குச்சவெளி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச பகுதியில் நேற்றுமுன்தினம் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விவசாயிகளினால் தொல்லியல் துறையினருக்கு எதிரான மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குச்சவெளி பழைய பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

1962 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 வரையான காலப் பகுதிகள் வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் மிகப்பெரிய நெற்களஞ்சியசாலையாக விளங்கிய குறித்த இடத்தில் 1985ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் குச்சவெளி பொலிஸ் நிலையம் தற்காலிகமாக இயங்கி வந்தது.

கடந்த ஆண்டு குச்சவெளி பொலிஸ் நிலையம் அவ்விடத்தில் இருந்து இடம் மாற்றம் சென்றதை அடுத்து குறித்த இடம் மீண்டும் நெற்களஞ்சிய சாலையாக இயக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் கடந்த 28.12.2024ஆம் திகதி இரவு வேளையில் இலங்கை தொல்லியல் திணைக்களத்தினரால் அவ்விடம் தொல்லியல் திணைக்களத்திற்குரிய இடம் என பதாதை வைக்கப்பட்டு தொல்லியல் துறை வசமானது.

குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனேக மான காணிகள் தொல்லியல் துறை யினரால் அடாவடியான முறையில் கையகப்படுத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் கலை இலக்கிய விழா



(எம்.சி. அன்சார்)

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான செயலகத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச செயலகம், கலாசார அலுவல்கள் திணைக் களம் மற்றும் சம்மாந்துறை பிரதேச கலாசார அதிகார சபை ஆகிய இணைந்து நடாத்திய பிரதேச கலை இலக்கிய விழா சம்மாந்துறை அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலா ளர் எஸ்.எல்.எம். ஹனீபா தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண் டார்.

கௌரவ அதிதிகளாக சம்மாந் துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.எம். அஸ்லம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்சான், கலாசார அதிகார சபையின் உபதலைவர் எம். எல்.இஷ்ஹாக், கவிஞர் மன்சூர் ஏ.காதீர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் றஸ்மி மூஸா, கலைஞர்கள், கல்விமான்கள், இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு கலை, கலாசாரம், ஊடகத்துறை போன்ற துறைகளில் தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களை வாழ்த்தி சான்றி தழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச மட்டத்தில் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கலை இலக்கிய போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# கல்முனை சாஹிரா மீண்டும் சாதனை



(நூருல் ஹுதா உமர்)

திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் கலாச்சார அமைச்சினால் அண்மையில் நடத்தப்பட்ட தேசிய மட்ட கலாசார போட்டியில் கல்முனை ஸாஹிறா கல்லூரி (தேசிய பாடசாலை) ரபான் நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தை பெற்று கல்லூரிக்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளனர்.

இப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், மாணவர்களை வழிப்படுத்தி பயிற்றுவித்த ஆசிரியர் எம்.ஐ.எம்.அமீர்க்கும் கல்லூ ரியின் அதிபர் எம்.ஐ.ஜாபீர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் மகிழ்ச்சியுடன் வரவேற்று பாராட்டி கௌரவித்தனர்.

# விஸ்டம் சிறுவர் பாடசாலையில் கலை நிகழ்வு




(திகாமடுல்ல நிருபர்)

அட்டாளச்சேனை விஸ்டம் அகடமி ஆங்கில பாலர் பாடசாலை யின் விடுகை விழாவும், கலை நிகழ் ச்சியும் லொயிட்ஸ் விழா மண்டபத் தில் நடைபெற்றது.

பாடசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எம்.இர்பான் தலை மையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்ஸன், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், பிரதம அதிதிகளாகவும் உதவி கல்வி பணிப்பாளர் ஏ.எல். பாயிஸ், சொக்கமோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.றியாஸ் அதிபர் களான ஒ.எல்.எம்.றிஸ்வான், எஸ்.எம்.றஹீம், ஏ.கே.நழீம், எம்.எச்.அப்துல் றஹுமான் கௌரவ அதிதிகளாகவும், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.ஐ.றியாஸ், ஐ.எல்.எம்.றபீக் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

போட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர் ளுக்கு அதிதிகளினால் பரிசு பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதுடன் அதிதிகளின் உரைகளும் இடம் பெற்றன.

# அட்டபாகே வைத்தியசாலைக்குள் குளவிகள் கொட்டி 11 பேர் பாதிப்பு

கம்பளை அட்டபாகேயில் உள்ள உடகம கிராமிய வைத்தியசாலைக்குள் புகுந்த குளவிக் கூட்டம் கொட்டியதில் 11 பேர் கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குளவி தாக்குதலுக்கு உள்ளான பெண்ணொருவர் அலறியடித்துக் கொண்டு, உடகம கிராமிய வைத்தியசாலைக்குள் ஓடியதை அடுத்து, அப்பெண்ணின் பின்னால் துரத்திவந்த குளவிகளே கொட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனை ஊழியர்கள் நால்வர் மீதும், மருத்துவ மனைக்கு வந்திருந்த எட்டு பெண்கள் மீதும், மருத்துவர் மீதும் குளவிகள் தாக்கியுள்ளன.

அட்டபாகே கலவெல்கொல்ல பிரதேசத்தில் மரத்தில் கட்டப்பட்டிருந்த குளவி கூட்டை பறவையொன்று தாக்கியதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்விடத்தில் பயணித்த பெண் ஒருவரை இந்த குளவி கொட்டியதால் குளவி கொட்டியதிலிருந்து தப்பிக்க அலறியடித்துக் கொண்டு அப்பெண் வைத்தியசாலைக்கு ஓடியுள்ளார்.

அப்போது வைத்தியசாலையில் சிகிச்சை களைப் பெறுவதற்காக, அதிகமானோர் அங்கு வருகை தந்திருந்தனர். இந்த பெண் கூச்சலிட்டபடி அங்குச் சென்றபோது, அவரை பின்தொடர்ந்து வந்த குளவிகள் அனைவரையும் தாக்கியுள்ளன.

அச்சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையின் ஜன்னல் கதவுகளை மூடி தீ மூட்டி குளவிகளைக் கலைக்க முற்பட்டுள்ளனர். எனினும், முயற்சி கைகூடவில்லை.

இந்நிலையில், இரண்டு அம்பியூலன்ஸ்கள் வைத்தியசாலைக்கு அவசரமாக வரவழைக் கப்பட்டு, குளவிகளால் கடுமையாகக் கொட்டப்பட்டவர்கள் கம்பளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள கடைகளின் ஊழியர்களுக்கும் குளவிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டதால் அவர்களும் கடைகளை மூடிவிட்டு தீயைக் கொளுத்திவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டதாகத் தெரியவருகின்றது.

# கொழும்பு பல்கலை மாணவன் யாழ் விபத்தில் உயிரிழப்பு

(பு. கஜிந்தன்)

மோட்டார் சைக்கிள் – கார் விபத்தில் சிக்கிய கொழும்பு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ஒருவர் (31) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியாவைச் சேர்ந்த சந்திரபோஸ் சஜீகாந் (வயது 23) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் கடந்த 25ஆம் திகதி தனது வீட்டிலிருந்து நண்பரின் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது குருமண்காடு பகுதியில் வீதியில் நிறுத்தி வைத்திருந்த காருடன் அவரது மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 26ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி 31 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# சாட்சியை வெட்டிய பிரதான சந்தேக நபர் கைது

(பு. கஜிந்தன்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு ஒன்றுக்குச் சாட்சிக்காக வந்த நபரை வாளால் வெட்ட முயற்சித்த பிரதான சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வாள் வெட்டு வழக்கு ஒன்றின் சாட்சிக்காகக் கடந்த 2024.05.30 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு வந்த நபரை, நீதிமன்றத்துக்கு முன்னால் வைத்து வாளால் வெட்டி தாக்க முற்பட்ட மூவரில் இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் தலைமறைவாகி இருந்த பிரதான சந்தேக நபரும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் – ஆரியகுளத்துக்கு அருகாமையில் வைத்துக் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவருக்கு வாள் வெட்டு தொடர்பாக மூன்று திறந்த பிடியாணை உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். நகரத்தில் வன்முறை கும்பல் அட்டகாசம்; நால்வர் அதிரடிக் கைது

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் வன்முறையிலும், அமைதியைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த நால்வர் நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது இரண்டு முச்சக்கர வண்டிகளும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், நேற்று முன்தினம் அதிகாலை நள்ளிரவு வன்முறை கும்பல் ஒன்று இளைஞர் ஒருவரைக் கீழே தள்ளிவிட்டு கொடூரமாகத் தாக்கும் காணொளி வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் நிகழ்வுகள் நடைபெற்றன. இவ்வாறு நிகழ்வுகளில் கலந்துகொண்ட பின்னர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள தனியார் பஸ் தரிப்பு நிலையத்திற்கு வந்த கும்பல் ஒன்று அங்கு அட்டகாசம் புரிந்துள்ளது.

அந்த கும்பலானது முச்சக்கர வண்டியின் ஒரு சில்லினை தூக்கி ஆபத்தான முறையில் வீதியின் குறுக்கு மறுக்காக ஓட்டியுள்ளது. அதன்பின்னர் குறித்த கும்பல் இளைஞர் ஒருவர் மீது, தலைக்கவசம், கையில் உள்ள பொருட்களில் கொலைவெறித் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இதனால் அந்த பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் பயத்தையும் தோற்றுவித்துள்ளது.

இச் சம்பவம் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தனபால ஆகியோரது கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸாரும் இணைந்து வன்முறை கும்பலைச் சேர்ந்த நால்வரை நேற்று கைது செய்தனர். அத்துடன் ஆபத்தான முறையில் வீதிக்குக் குறுக்கு மறுக்காகச் செலுத்திய இரண்டு முச்சக்கர வண்டிகளும் மீட்கப்பட்டன. தாக்குதலில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




கண்டி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற புத்தாண்டு பூஜைகள்.
**படங்கள் கம்பளை நிருபர்**




தேசிய ரீதியில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நேற்று வவுனியா மாவட்ட பாடசாலைகளில் இவ்வாண்டுக்கான முதல் நாளில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கான உறுதிப்பிரமாணம் வழங்கினர். இதன்போது வவுனியா தெற்கு வலய அல் இக்பால் மகாவித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டபோது.

**படங்கள் கி.வசந்தன்**




மலையக கலை, கலாசார (இரத்தின தீபம்) சங்கம் நடத்திய மறைந்த சான்றோர்களை நினைவுகூரும் நிகழ்வு கண்டி கெப்பட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. **படங்கள் கம்பளை நிருபர்**

# தொற்று நோய்கள் பரவக்கூடிய சாத்தியமிருப்பதால் அனுமதி மறுக்கப்பட்டது

## குடிவரவு, குடியகல்வுத் கட்டுப்பாட்டாளர் நாயகம்

றொஹிங்கிய அகதிகளிடமிருந்து நோய்த்தொற்றுக்கள் பரவக்கூடிய சாத்தியம் இருப்பதாலேயே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் தம்மிடம் விளக்கமளித்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் எல்.ரி.பி.தெஹிதெனிய தெரிவித்துள்ளார்.

அண்மையில் மியன்மாரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு விமானப்படைத்தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளிடம் விசாரணை நடத்துவதற்கு கடந்த 26 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் முல்லைத்தீவு விமானப்படைத்தளத்துக்குச் சென்றிருந்த போதிலும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அனுமதியின்றி அகதிகளைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கமுடியாது என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து திங்கட்கிழமை கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் இதுகுறித்து விளக்கம் கோரப்பட்டது.

அதனையடுத்து இதுபற்றி ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்திய ஆணைக்குழுவின் தவிசாளர் எல்.ரி.பி.தெஹிதெனிய மேலும் கூறியதாவது:

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின்படி நீதிமன்ற உத்தரவின் பிரகாரமோ அல்லது வேறு விதமாகவோ தடுத்துவைக்கப்பட்டிருப்போரை சென்று பார்வையிடுவதற்கும், அவர்களது நிலை குறித்து ஆராய்வதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டிருக்கும் அவ்வதிகாரத்துக்கு அமைவாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி அங்கு ஆராய்வுக்குச் சென்றார். இருப்பினும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், அதுகுறித்துக் கேட்டறியும் நோக்கிலேயே குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகமும், விமானப்படை அதிகாரிகளும் ஆணைக்குழுவுக்கு வரவழைக்கப்பட்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இச்சம்பவம் குறித்து தான் பெரிதும் கவலையடைவதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்மிடம் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி நாட்டை வந்தடைந்த றொஹிங்கிய அகதிகளால் நோய்கள் பரவக்கூடுமோ என்ற கரிசனையின் விளைவாகவே அவர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.




# குகேஷ் உட்பட நால்வருக்கு 'கேல் ரத்னா' விருது அறிவிப்பு



தமிழகத்தைச் சேர்ந்த உலக செஸ் சம்பியன் குகேஷ் உட்பட நால்வருக்கு மத்திய அரசின் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. பரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடுதல் போட்டியில் 2 பதக்கங்களை வென்ற வீராங்கனை மனு பாக்கருக்கும் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய ஹொக்கி அணியின் தலைவர் ஹர்மன்ப்ரீத் சிங் மற்றும் பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற பாரா தடகள வீரர் பிரவீன்குமாருக்கும் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு வீரர்களுக்கும் வரும் 17ம் திகதி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு விருதுகளை வழங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தவிர தமிழக பாரா பட்மின்டன் வீராங்கனைகள் மூவருக்கு அர்ஜுனா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, துளசிமதி முருகேசன், நித்யஸ்ரீ சுமதி சிவன், மணீஷா ராமதாஸ் ஆகிய 3 வீராங்கனைகளுக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

# இந்தியாவில் வோக்கிங் நிமோனியா காய்ச்சல்



இந்தியாவில் பருவமழை காலத்தில் பரவி வரும் வோக்கிங் நிமோனியா காய்ச்சல் மக்கள் மத்தியில் ஒருவிதமான பீதியை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த மைக்கோ பிளாஸ்மா நிமோனியாவால் ஏற்படும் நுரையீரல் தொற்று உள்ளவர்கள் ஆரோக்கியமாக இருப்பதாக தோன்றலாம். இலேசான அறிகுறிகளுடன் இருப்பதால் வீட்டிலோ அல்லது படுக்கையிலோ இருக்காமல் நடமாடிக் கொண்டிருப்பார்கள் எனவே தான் அந்நிலைக்கு வோக்கிங் நிமோனியா என்று பெயர் வைத்துள்ளார்கள். பொதுவான அறிகுறிகளாக உடல் சோர்வு, காய்ச்சல், தலைவலி, இருமல், தொண்டை வலி இருக்கும். குழந்தைகளை பொறுத்தவரை தும்மல், சுவாசிப்பதில் சிரமம், சளி, கண்களில் நீர்வழதல் காணப்படும். நுரையீரல் தொற்று உள்ளவர்களுக்கு பொதுவாக குளிர், அதிகமான இருமல், சோர்வு காணப்படும். சிலர் எந்த அறிகுறியும் இல்லாமல் இருக்கலாம். இந்த மாதிரி அறிகுறி இருப்பவர்கள் பி.சி.ஆர், அன்ரிபொடி பரிசோதனை செய்து கொள்வது அவசியம். தொற்று கண்டறியப்பட்டால் 'அசித்ரோமைசின்' மருந்து எடுத்து கொள்கிறார்கள். கடுமையான மூச்சு திணறலுடன் பலர் வைத்தியசாலைகளுக்குச் செல்வதாகவும் அவர்களுக்கு ஒட்சிசன் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். குழந்தைகள் பலர் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகிறார்கள். இந்த தொற்று ஏற்பட்டு இருப்பவர்கள் தும்மும் போதும், இருமும் போதும் வெளிப்படும் கிருமிகளால் மற்றவர்களுக்கும் இந்த தொற்று ஏற்படுகிறது.

நெருக்கமான இடங்களில் செல்பவர்கள், பாடசாலை அல்லது கல்லூரி மாணவ-மாணவிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த வயதானவர்கள், கர்ப்பிணி பெண்கள் எளிதில் இந்த தொற்றுக்கு ஆளாகிறார்கள். இந்த தொற்றில் இருந்து தப்பிக்க முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி மட்டுமே தீர்வு என தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவின் 440 மாவட்டங்களில் நிலத்தடி நீர் மாசு



நாடு முழுவதும் 440 மாவட்டங்களில் உள்ள நிலத்தடி நீர் மாசடைந்துள்ளதாக மத்திய நிலத்தடி நீர் சபை தெரிவித்துள்ளது.

2023ம் ஆண்டு நிலவரப்படி, 440 மாவட்டங்களில் நிலத்தடி நீரில் நைட்ரேட் அளவு பாதுகாப்பு அளவை விட கூடுதலாக இருப்பது தெரியவந்துள்ளது. இது கடந்த 2017ம் ஆண்டு 359 மாவட்டங்களில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. 7 ஆண்டுகளில் 80 மாவட்டங்களில் பாதிப்பு அதிகரித்துள்ளது. தரவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது, இந்தியாவில் உள்ள 56 சதவீதம் மாவட்டங்களில், ஒரு லீட்டர் தண்ணீரில் 45 மில்லி கிராமிற்கும் அதிகமான நைட்ரேட் அமிலம் இருப்பது தெரியவந்துள்ளது. இது குழந்தைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு மிகவும் ஆபத்தானது என வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். அதிகபட்சமாக ராஜஸ்தானில் 49 சதவீதமும், கர்நாடகாவில் 48 சதவீதம் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, தமிழகத்தில் 37 சதவீத நிலத்தடி நீரில் பாதுகாப்புக்குரிய அளவை விட, நைட்ரேட் நச்சு கூடுதலாக இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. விவசாயத்துக்கு பயன்படுத்தக்கூடிய நைட்ரேட் உரம் காரணமாக நிலத்தடிநீரில் நைட்ரேட் அதிகரிக்கிறது. 30.77 சதவீதம் இருந்த நைட்ரேட் பாதிப்பு, பருவமழைக்குப் பிறகு 32.66 சதவீதமாக அதிகரித்ததும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

நைட்ரேட்டை போன்று ப்ளோரைட் மற்றும் யுரேனியம் ஆகியவையும் நிலத்தடி நீரை அதிகம் பாதிக்கின்றன. ராஜஸ்தான், ஹரியானா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளில், 100ppb (parts per billion) யுரேனியம் அதிகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 30ppb இற்கு அதிகமாக யுரேனியம் இருந்தாலே அது பாதுகாப்பற்றது என்கின்றனர் நிபுணர்கள். எனவே, நிலத்தடி நீரை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

# எஸ்.வி.சேகருக்கு சிறை: உயர்நீதிமன்றம் உறுதி



நடிகர் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாத சிறை தண்டனையை உறுதி செய்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கடந்த 2018 ஆம் ஆண்டு பெண் பத்திரிகையாளர்கள் குறித்து சமூக வலைத்தளங்களில் சர்ச்சைக்குரிய கருத்து பதிவிட்டது தொடர்பான சம்பவத்தில் நடிகர் எஸ்.பி.சேகருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. எஸ்.பி. சேகர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சங்கம் சார்பில் கொடுக்கப்பட்ட இந்த வழக்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாதம் சிறை தண்டனை மற்றும் 15,000 இந்திய ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு இருந்தது. இந்த தண்டனையை எதிர்த்து சென்னை நீதிமன்றத்தில் எஸ்.பி.சேகர் மேன்முறையீடு செய்திருந்தார். சிறப்பு நீதிமன்றம் தனக்கு வழங்கிய தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என தெரிவித்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி வேல்முருகன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. சிறப்பு நீதிமன்றம் நடிகர் எஸ்.வி.சேகருக்கு வழங்கிய ஒரு மாத கால சிறை தண்டனையை இரத்து செய்ய முடியாது என மறுப்பு தெரிவித்த நீதிபதி வேல்முருகன், மேன்முறையீட்டை தள்ளுபடி செய்ததோடு சிறை தண்டனையை உறுதி செய்தார்.

# ஏர் இந்தியா விமானங்களில் இலவச WiFi சேவை

உள்நாட்டு வழித்தடங்களில் விமானத்தில் இலவச இணைய அணுகல் (Wi-Fi) வழங்கும் முதல் இந்திய விமான நிறுவனம் என்ற பெருமையை ஏர் இந்தியா பெற்றுள்ளது.

அதன்படி, ஏர் இந்தியாவின் உள்நாட்டுப் பயணிகள் இப்போது இணையத்தில் உலாவவும், சமூக ஊடகங்களை அணுகவும், ஒன்லைன் பணிகளை மேற்கொள்ளவும் அல்லது விமானங்களில் இருந்து நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் செய்திகள் மற்றும் அரட்டைகளை மேற்கொள்ளவும் முடியும்.

ஜனவரி 1, 2025 முதல், ஏர் இந்தியாவின் ஏர்பஸ் A350, போயிங் 787-9 மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏர்பஸ் A321 நியோ விமானங்கள் மூலம் இயக்கப்படும் அனைத்து ஏர் இந்தியா விமானங்களிலும் பயணிகள் மேலதிக கட்டணமின்றி இலவச இணையத்துக்கான வசதியை பெற முடியும் என விமான நிறுவனம் புதன்கிழமை அறிவித்தது.

இந்த புதிய சேவையின் மூலம், பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்துவதை விமான நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பல விமானங்களுக்கு இந்த சேவையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. Wi-Fi சேவையானது iOS அல்லது Android இல் இயங்கும் மடிக்கணினிகள், டப்லெட்டுகள் மற்றும் ஸ்மார்ட்போன்கள் உட்பட பல சாதனங்களுக்கான இலவச இணைய சேவையை வழங்கும். இந்த நடவடிக்கையின் மூலம், ஏர் இந்தியா இந்திய விமானப் போக்குவரத்தில் ஒரு அளவுகோலை அமைப்பது மட்டுமல்லாமல், புதுமை மற்றும் வாடிக்கையாளர் திருப்திக்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. பணிகளுக்காகவோ அல்லது பொழுது போக்காகவோ, 35,000 அடி உயரத்தில் இணையச் சேவையில் இணைந்திருப்பது ஒருபோதும் எளிதான விடயம் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.




# திருப்பதியில் காணிக்கையாக ₹1,365 கோடி வசூல்



திருமலை திருப்பதி கோயிலில் கடந்த ஓராண்டில் (2024) மட்டும் 1,365 கோடி இந்திய ரூபாய்கள் வசூலாகி இருப்பதாக தேவஸ்தான செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. திருப்பதி சீனிவாச பெருமாளை தரிசனம் செய்ய 2 கோடியே 55 இலட்சம் பேர் சென்றுள்ளனர். 6 கோடியே 30 இலட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது. 12 கோடியே14 இலட்சம்லட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. திருப்பதி பிரம்மோற்சவத்தை முன்னிட்டு 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரியில் கண்ணாடி பாலம்



கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையிலிருந்து திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்கு 77 மீற்றர் நீளத்தில் கண்ணாடி இழைப் பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவிடத்தையும் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள இடத்தையும் இணைக்கும் வகையிலான கண்ணாடி இழைப் பாலம் சமீபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடல் மீது இப்படி கண்ணாடிப் பாலம் கட்டப்பட்டிருப்பது இதுவே முதல் முறை எனவும் தமிழ்நாடு அரசு சார்பில் கூறப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை விவேகானந்தர் நினைவிடத்திற்கும் திருவள்ளுவர் சிலைக்கும் அழைத்துச் செல்ல பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் படகுப் போக்குவரத்து நடத்தப்படுகிறது. விவேகானந்தர் நினைவிடம் அமைந்திருக்கும் பாறையோடு ஒப்பிட்டால், திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறை உயரம் குறைவானது. ஆகவே, கடல் கொந்தளிப்பாக இருக்கும்போதும் நீர்மட்டம் குறைவாக இருக்கும்போதும் திருவள்ளுவர் சிலைக்கு படகுகளை இயக்க முடிவதில்லை. இதனால் இந்த இரு நினைவுச் சின்னங்களையும் இணைக்கும் வகையில் ஒரு பாலம் கட்ட முடிவு செய்யப்பட்டது. சுமார் 37 கோடி இந்திய ரூபாய் செலவில் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாசு இல்லாத டில்லியாக மாற்றுவோம்

## மத்திய அமைச்சர் நிதின் கட்கரி



அடுத்த 5 ஆண்டுகளில் டில்லியை மாசு இல்லாததாக மாற்றுவோம் என மத்திய வீதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்.

தேசிய தலைநகரை காற்று மாசுபாட்டிலிருந்து விடுவிக்க, மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், மேலும் பல நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாகவும் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி நேற்று தனது திட்டத்தை தெரிவித்தார். அடுத்த 5 ஆண்டுகளில் டில்லியை காற்று மாசுபாட்டிலிருந்து விடுவிக்கும் பல திட்டங்கள் செயல்பாட்டுக்கு வர உள்ளன. தேசிய தலைநகர் டில்லியில் 40 சதவீதம் காற்று மாசுபாடு, பொருட்களை எரிப்பதால் ஏற்படுகிறது. இப்பிரச்சனையிலிருந்து விடுபட, இது தொடர்பாக, மத்திய அரசு, நகரத்தில் மின்சார பஸ்களை அறிமுகப்படுத்தியது. அதுவே நாட்டில் மின்சார கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களை அறிமுகப்படுத்த வாகன உற்பத்தியாளர்களுக்கு உதவியது. சி.என்.ஜி, எல்.பி.ஜி மற்றும் ப்ளெக்ஸ் எரிபொருள்கள் போன்ற மாற்று எரிபொருள் வாகனங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் அனைத்தும் இணைந்து டில்லியை காற்று மாசுபாட்டிலிருந்து விடுவிப்பது மட்டுமல்லாமல், நாட்டின் எரிபொருள் இறக்குமதியைக் குறைக்கவும், வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு உதவும் என நிதின் கட்கரி தெரிவித்தார்.

# மொண்டெனேகுரோவில் துப்பாக்கிச் சூடு



தென்கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள மொண்டெனேகுரோவின் (Montenegro)மேற்கு நகரமொன்றில் புதன்கிழமை (ஒ)மதுபானசாலையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரு குழந்தைகள் உட்பட குறைந்தது 10 பேர் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் மேலும் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் 45 வயதான அகோ மார்டினோவிக் (Aco Martinovic) என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சந்தேக நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு பின்னர், தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாகவும், பின்னர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்து விட்டதாகவும் மொண்டெனேகுரோவின் உள்துறை அமைச்சர் டானிலோ சரனோவிக் அரச ஒளிபரப்பாளரான RTCG இடம் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி ஏந்திய நபர் செட்டின்ஜே (Cetinje) நகரில் அமைந்துள்ள மதுபானசாலையின் உரிமையாளரை முதலில் சுட்டுக் கொன்றார், பின்னர் அவரது குழந்தைகள் மற்றும் அவரது சொந்த குடும்ப உறுப்பினர்கள் மீதும் துப்பாக்கி சூடு நடத்தியதாக உள்துறை அமைச்சர் டானிலோ சரனோவிக் கூறினார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்த 4 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம், இந்த துப்பாக்கிச் சூடு, திட்டமிட்ட குற்றத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

சிறிய பால்கன் நாட்டில் வெகுஜன துப்பாக்கிச் சூடுகள் ஒப்பீட்டளவில் அரிதானவை. இறுதியாக கடந்த 2022 ஆம் ஆண்டில், செட்டின்ஜேயில், இரண்டு குழந்தைகள் மற்றும் ஒரு துப்பாக்கிதாரி உட்பட 11 பேர் வெகுஜன துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# சிம்பாபேயில் மரணதண்டனை இரத்து

சிம்பாபேயில் மரணதண்டனையை இரத்து செய்வதற்கான சட்டமசோதா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

ஆபிரிக்க நாடான சிம்பாபேயில் பல ஆண்டுகளாகவே மரண தண்டனைக்கு எதிராக தீவிர பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. குறிப்பாக கடந்த 2017 ஆம் ஆண்டு அந்த நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற எம்மர்சன் மனங்காக்வா மரண தண்டனைக்கு எதிரான எதிர்ப்பை பற்றி பகிரங்கமாக பேசினார். 1960களில் சுதந்திரப் போரின் போது மரண தண்டனையை எதிர்கொண்டவரான எம்மர்சன் மனங்காக்வா, மரண தண்டனையை முற்றிலுமான ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தார். மேலும் பொது மன்னிப்பு வழங்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை பயன்படுத்தி மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து வந்தார். இந்த நிலையில் நாட்டில் மரணதண்டனையை இரத்துச் செய்வதற்கான சட்டமசோதா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மசோதா ஒரு மனதாக நிறைவேறியது. இதனையடுத்து,



மரணதண்டனையை இரத்து செய்யும் சட்டமசோதாவிற்கு ஜனாதிபதி எம்மர்சன் மனங்காக்வா ஒப்புதல் அளித்தார். இதன் மூலம் சிம்பாபேயில் மரண தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. சிம்பாபேயில் தற்போது 60 கைதிகள் மரண தண்டனையில் உள்ளனர். புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவர்களின் தண்டனை இரத்து செய்யப்படும். சிம்பாபேயில் கடைசியாக கடந்த 2005ம் ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்லாவிற்கு போட்டியாக சீன வாகன தயாரிப்பு நிறுவனம்




முன்னணி மின்சார வாகன தயாரிப்பாளர்களான டெஸ்லாவுடனான பலத்த போட்டிக்கு மத்தியில், சீனாவின் BYD Co மின்சார வாகன தயாரிப்பாளர் 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விற்பனையில் ஏற்றம் கண்டனர்.

BYD Co. நிறுவனம் கடந்த டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 207,734 மின்சார வாகனங்களை விற்பனை செய்துள்ளது.

அதேநேரம், மானியங்கள் மற்றும் தள்ளுபடிகள் மூலமாக கடந்த ஆண்டு மாத்திரம் 1.76 மில்லியன் மின்சார வாகன விற்பனையை நிறுவனம் பதிவு செய்துள்ளது.

வியாழக்கிழமைக்கு பிற்பகுதியில் எலோன் மஸ்க் தலைமையிலான அமெரிக்க நிறுவனமான டெஸ்லா தனது சொந்த காலாண்டு விற்பனை புள்ளிவிவரங்களை வெளியிடவுள்ள நிலையில் BYD Co.வின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. முந்தைய காலாண்டில் BYD I விட மின்சார வாகன விற்பனையில் டெஸ்லா மிதமான முன்னேற்றத்தை கண்டது. எனினும், சீனாவின் Shenzhen-I தளமாகக் கொண்ட BYD நிறுவனத்தின் மொத்த வாகன விற்பனை 2024 ஆம் ஆண்டில் 41% க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

2024 இன் மூன்றாம் காலாண்டில், BYD அதன் வருவாய்கள் உயர்ந்து, டெஸ்லாவை முதன்முறையாக வீழ்த்தியது.

இது ஜுலை மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையே 200 பில்லியன் ($28.2bn> £21.8bn) வருவாயை பதிவு செய்தது. இந்த எழுச்சி முக்கியமாக அதன் ஹைபிரிட் கார்களின் விற்பனையால் ஈர்க்கப்பட்டது. வோக்ஸ்வேகன் மற்றும் டொயோட்டா போன்ற வெளிநாட்டு கார் தயாரிப்பாளர்களுடனான பலத்த போட்டிகளுக்கு மத்தியில் BYD தனது 90% கார்களை சீனாவில் விற்பனை செய்கிறது. எனினும், டெஸ்லா உலக சந்தையில் இன்னும் BYD ஐ விட அதிக மின்சார வாகனங்களை விற்பனை செய்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்பிற்கு சொந்தமான ஹோட்டல் முன் தீப்பிடித்த டெஸ்லா சைபர் ட்ரக்




லாஸ் வேகாஸில் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு சொந்தமான ஹோட்டலுக்கு முன்பு டெஸ்லா சைபர் ட்ரக் தீ பிடித்து வெடித்ததில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர். புதன்கிழமை நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான வீடியோ காட்சிகளை கொண்டு பொலிஸார் விசாரணை நடத்தினர். தீவிபத்துக்கு முன்பு டெஸ்லா சைபர் ட்ரக் ஒன்று ஹோட்டலுக்கு முன்பு வந்து நிற்கிறது. அதன் பின்பு திடீரென பட்டாசு வெடிப்பதைப் போல வெடித்து தீப்பிடித்து எரிகிறது என தெரிவித்தனர்.

இதற்கு எலொன் மஸ்க் எக்ஸ் தளத்தில் டெஸ்லா சைபர் ட்ரக்கில் கொண்டு வரப்பட்ட வெடிகுண்டு காரணமாக வெடிவிபத்து ஏற்பட்டதாகவும் இதற்கும் வாகன தீவிபத்துக்கும் தொடர்பில்லை என தெரிவித்துள்ளார். இதனிடையே, வெடிவிபத்துக்கான காரணத்தை கண்டறியும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தாய்லாந்தில் பஸ் விபத்து: 5 பேர் பலி

தாய்லாந்தில் சுற்றுலா பஸ் விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்தனர். தெற்கு தாய்லாந்தில் உள்ள யாலா மாகாணத்திற்கு சுற்றுலா செல்வதற்காக பாங்கொங் அருகே உள்ள சமுத் சகோன் மாகாணத்தில் வசிப்பவர்கள் பஸ்சில் பயணித்தனர். அந்த சுற்றுலா பஸ் சூரத் தானி மாகாணத்தில் உள்ள வீதியின் கூர்மையான




வளைவில் திரும்பும்போது சறுக்கி, மரத்தில் மோதி கவிழ்ந்தில் 5 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் பற்றி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்த ஆண்டில் 3 ஆம் உலகப்போர்

### மனோதத்துவ நிபுணர் கணிப்பு

புத்தாண்டு கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெற்ற நிலையில், புதிய ஆண்டில் பூமியில் அழிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக பாபா வங்கா கணித்திருந்தது ஏற்கனவே சமூக வலைத்தளங்களில் பரவி இருந்தது. இந்நிலையில் லண்டனை சேர்ந்த மனோதத்துவ நிபுணர் நிக்கோலஸ் அஜ்லா என்பவர் இந்த ஆண்டில் 3ம் உலகப்போர் நிச்சயமாக வரும் என கணித்துள்ளார்.

38 வயதான இவர் ஏற்கனவே கடந்த 2018ம் ஆண்டு கொரோனா போன்ற பெருந்தொற்று வரப்போகிறது. அதில் இலட்சக்கணக்கான மக்கள் இறக்க நேரிடும் என கூறியிருந்தார். அதன்படி தற்போது நிக்கோலசின் கணிப்பு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

மதம் மற்றும் தேசியத்தின் பெயரால் மக்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வார்கள், அரசியல் படுகொலைகள் நடக்கும், தீமையும், வன்முறையும் இந்த பூமியை கைப்பற்றும். அதிக மழை, பேரழிவு தரும் வெள்ளம் இருக்கும். இதனால் இலட்சக்கணக்கான வீடுகள் சேதம் அடையும். கடல் மட்டம் வேகமாக உயரும். பல நகரங்கள் நீரில் மூழ்கும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரேசிலில் மேம்பாலம் இடிந்து விழுந்து விபத்து

### பலி எண்ணிக்கை 12ஆக உயர்வு



பிரேசிலிலில் மேம்பாலம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 12ஆக அதிகரித்துள்ளது.

பிரேசிலின் வடகிழக்கு பகுதியில் உள்ள டோகன்டின் ஆற்றின் மீது உள்ள மேம்பாலம், கடந்த டிசம்பர் 22ம் திகதி திடீரென இடிந்து விழுந்தது. மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த, 3 லொறிகள் உட்பட 10 வாகனங்கள் ஆற்றில் விழுந்தன. பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த விபத்தில் சிக்கியவர்களை, ஆற்றில் இருந்து மீட்கும் பணியில் கடற்படையினரின் உதவியுடன் பொலிஸாரும் ஈடுபட்டனர். இதுவரையில் 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், தற்போது மேலும் இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், பலி எண்ணிக்கை 12ஆக அதிகரித்துள்ளது.

மேலும் காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இரசாயனம் ஏற்றிச்சென்ற லொறி ஆற்றில் விழுந்ததால், தண்ணீரில் ஏதேனும் இரசாயனம் கலந்து விட்டதா? என்று அப்பகுதி மக்கள் அச்சமடைந்தனர். ஆனால், தேசிய தண்ணீர் ஏஜென்சி அப்படி ஏதும் நடக்கவில்லை என தெரிவித்துள்ளது. இந்த விபத்து குறித்து தேசிய போக்குவரத்து உட்கட்டமைப்புக்கான இயக்குநரகம் விசாரணை நடத்தி வருகிறது.

# பங்களாதேஷில் சின்மய் கிருஷ்ண தாசுக்கு மீண்டும் ஜாமீன் மறுப்பு

பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு, சிறுபான்மை இந்துக்கள் மற்றும் அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இது இந்துக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த நவம்பர் 25ம் திகதி இந்து அமைப்பின் தலைவரும், இஸ்கான் முன்னாள் துறவியுமான சின்மய் கிருஷ்ண தாஸ் தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார். மறுநாள் அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவருக்கு பிணை மறுக்கப்பட்டது.

இதனால் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு பிணை மறுக்கப்பட்டதால் இந்துக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பு ஏற்பட்டது. நீதிமன்றத்திற்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட மோதலில் வழக்கறிஞர் ஒருவர் கொல்லப் பட்டார்.




இந்நிலையில், சின்மய் கிருஷ்ண தாசின் பிணை மனு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேசத்துரோக வழக்கு என்பதால் பிணை வழங்க அரசு தரப்பு வழக்கறிஞர் எதிர்ப்பு தெரிவித்தார். அவரது வாதத்தை ஏற்ற நீதிபதி சைபுல் இஸ்லாம், குற்றம்சாட்டப்பட்ட சின்மய் கிருஷ்ண தாசின் பிணை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இதையடுத்து, பிணை கோரி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய உள்ளதாக சின்மய் கிருஷ்ண தாசின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

Sports விளையாட்டு
oruvansports@gmail.com

# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி



## ஆட்ட நாயகன்-குசல் பெரேரா
## தொடர் நாயகன்-ஜேக்கப் டபி

இலங்கை – நியூசிலாந்தில் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ரி20 போட்டியில் இலங்கை 07 ஓட்டங்களில் ஆறுதல் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணத்தில் 3 ரி20 போட்டிகளில் முதல் 2 போட்டிகளில் நியூசிலாந்து 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

நேற்றைய 3ஆவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 218 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை அணியில் குசல் பெரேரா 101, அசலங்கா 46 அதிகப்படியான ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.



இதனையடுத்து 219 என்ற அதி கூடிய ஓட்டங்களைத் துரத்திச் சென்ற நியூசிலாந்து அணியும் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடத் தொடங்கியது. ஆரம்ப ஆட்டக்காரர்களான ரச்சின் ரவீந்திரா – டிம் ராபின்சன் முதல் விக்கெட்டுக்கு 7.2 ஓவர்களில் 81 ஓட்டங்களைப் பொற்று வலுவான அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். டிம் ராபின்சன் 37 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவரை தொடர்ந்து களமிறங்கிய மார்க் சாப்மேன் (9 ஓட்டங்கள்), பிலிப்ஸ் (6 ஓட்டங்கள்) குறைந்த ஓட்டங்களில் வெளியாகினர்.

பின்னர் ரச்சின் ரவீந்திராவுடன் சேர்ந்த டேரில் மிட்செலும் அதிரடியாக விளையாட நியூசிலாந்து இலக்கை நோக்கி வேகமாக முன்னேறியது. ஆனால் இந்த ஜோடி பிரிந்ததும் வெற்றி இலங்கைக்குச் சார்பாக மாறியது. ரச்சின் ரவீந்திரா 69 ஓட்டங்களிலும், டேரில் மிட்செல் 35 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதிக் கட்டத்தில் சக்காரி பவுல்க்ஸ் 21 ஓட்டங்கள் போராடியும் பலனளிக்கவில்லை.

நியூசிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 211 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை ஆறுதல் வெற்றி பெற்றது. இலங்கை அணியில் அசலங்க 3 விக்கெட்டுகளும், வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை நியூசிலாந்து 2-1 என்ற விகிதத்தில் கைப்பற்றியுள்ளது. குசல் பெரேரா ஆட்ட நாயகனாகவும், நியூசிலாந்து வீரர் ஜேக்கப் டபி தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

# இலங்கை வரும் அவுஸ்திரேலிய அணி

அவுஸ்திரேலிய -இலங்கை அணிகளுக்கிடையிலான 01 ஒருநாள் மற்றும் 02 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்குபற்றுவதற்காகச் சுற்றுலா அவுஸ்திரேலிய அணி ஜனவரி 20 ஆம் திகதி இலங்கைக்கு வருகிறது.

இரு அணிக்கும் இடையிலான ஒரேயொரு சர்வதேச ஒருநாள் போட்டி பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அம்பாந்தோட்டை கிரிக்கெட் மைதானத்தில் கடந்த ஒன்றரை வருடங்களாக ஒருநாள் போட்டிகள் நடத்தப்படவில்லை, மேலும் இலங்கை பங்கேற்ற கடைசி ஒரு நாள் போட்டி 2023 ஜூன் மாதம் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டி நடத்தப்பட்டது. அவுஸ்திரேலியா-இலங்கை அணிகளுக்கிடையிலான இந்த ஒருநாள் சர்வதேசப் போட்டியை இரவு பகலாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவுடனான டெஸ்ட் தொடர் 7ஆம் திகதி முடிவடைந்த நிலையில், சிறிய விடுமுறைக்குப் பின்னர் அவுஸ்திரேலிய அணி 20ஆம் திகதி இலங்கை வரவுள்ளது. இரு நாடுகளுக்கு மிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகளும் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டி 29ஆம் திகதி முதல் பெப்ரவரி 2ஆம் திகதி வரையிலும், 2ஆவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளது.

இரு டெஸ்ட் போட்டிகளும் உலக டெஸ்ட் சம்பியன் ஷிப்பின் கடைசி டெஸ்ட் போட்டிகள் என்பதால் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டு காலியில் நடைபெற்ற அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலையில் முடிவடைந்த நிலையில், 2016ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் தொடரை 3-0 என இலங்கை கைப்பற்றியது. 1983 முதல் அவுஸ்திரேலியாவும் இலங்கையும் 33 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளன, அதில் அவுஸ்திரேலியா 20 போட்டிகளில் வெற்றி பெற்றதோடு இலங்கைக்கு 5 வெற்றிகள்.

# விளையாட்டுத் துறை அமைச்சின் புத்தாண்டு நிகழ்வு





புத்தாண்டை முன்னிட்டு முதல் நாள் பணி ஆரம்ப நிகழ்வுகள் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிலும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன மற்றும் அமைச்சின் செயலாளர் அருண பண்டார, மேலதிக செயலாளர்கள் மற்றும் அமைச்சின் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அவுஸ்திரேலிய அணியில் மிட்செல் மார்ஷ் நீக்கம்; பியூ வெப்ஸ்டர் இணைப்பு

இந்திய – அவுஸ்திரேலிய பாடர் – கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் இறுதி 5 ஆவது டெஸ்ட் போட்டி இன்று சிட்னில் நடைபெறுகிறது.



இப் போட்டியில் முதலாவது டெஸ்டில் இந்தியாவும், 2-வது டெஸ்டில் அவுஸ்திரேலியாவும் வெற்றி பெற்றன. தொடர்ந்து 3-வது டெஸ்ட் மழையால் சமநிலையில் முடிந்தது. மெல்போர்னில் நடந்த 4-வது டெஸ்டில் அவுஸ்திரேலியா 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை தோற்கடித்து தொடரில் 2-1 என்ற விகிதத்தில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இந்த போட்டிக்கான அவுஸ்திரேலியாவின் ஆடும் அணி (பிளேயிங் லெவன்) அறிவிக் கப்பட்டுள்ளது. அதில் முன்னணி வீரரான மிட்செல் மார்ஷ் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக, பியூ வெப்ஸ்டர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### அவுஸ்திரேலிய அணி

கம்மின்ஸ் (கப்டன்), சாம் கான்ஸ்டாஸ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சேன், டிராவிஸ் ஹெட், பியூ வெப்ஸ்டர், ஸ்டீவ் சுமித், அலெக்ஸ் கேரி (விக்கெட் காப்பாளர்), ஸ்டார்க், ஸ்காட் போலன்ட், நாதன் லயன்.

# உலக உடற்கட்டமைப்பு சம்பியன்ஷிப்பில் மொஹமட் அஷ்பாக் பதக்கம் வென்று சாதனை

(மொஹமட் றிஷாட்)




ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற IFBB உலக உடற்கட்டமைப்பு மற்றும் உடல் தகுதி சம்பியன்ஷிப்பில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கனிஷ்ட பிரிவில் போட்டியிட்ட அஷ்பாக் அசி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

உடற்தகுதி மற்றும் உடற்கட்டமைப்புக்கான சர்வதேச கூட்டமைப்பு ஏற்பாடு செய்த 2024ஆம் ஆண்டுக்கான IFBB உலக உடற்கட்டமைப்பு மற்றும் உடல் தகுதி சம்பிய ன்ஷிப் தொடர் கடந்த 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்றது. இம்முறை போட்டித் தொடரில் இலங்கையிலிருந்து 6 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.



இதில் ஆண்களுக்கான உடற்கட்டமைப்பு கனிஷ்ட பிரிவில் இலங்கை சார்பில் போட்டியிட்ட அஷ்பாக் அசி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். சர்வதேச அளவில் அவர் வென்ற முதல் பதக்கம் இதுவாகும்.

இப்போட்டியில் ஜப்பானின் டான் இஷியாமா தங்கப் பதக்கத்தையும், சீனாவின் ஜாங் யான் சென் வெள்ளிப் பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டனர்.

கொழும்பு-வத்தளையை பிறப்பிடமாகக் கொண்ட 22 வயதான அஷ்பாக், அமல் சர்வதேசப் பாடசாலையில் பாடசாலைக் கல்வியை மேற்கொண்டார்.

தனது 15 வயதில் இருந்து உடற்கட்டமைப்பில் அதிக கவனம் செலுத்தி அதற்காக முறையான பயிற்சிகளை மேற்கொண்டு வந்த அவர், அண்மைக்காலங்களில் நடைபெற்ற தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றிப் பல வெற்றிகளையும் பெற்றுக்கொண்டார்.

எந்தவொரு அனுசரணையும் இன்றி இந்த போட்டித் தொடரில் பங்குகொண்ட அஷ்பாக், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கிட்டத்தட்ட 7 மில்லியன் ரூபா தனது சொந்த பணத்தை இதற்காகச் செலவழித்து பதக்கமொன்றையும் வென்று இலங்கை மண்ணுக்குக் கௌரவத்தையும் பெற்றுக்கொடுத்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 03 ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.